

விலை ரூ. 7-50

# இந்து கலாசாரம்

இந்து சமய திங்கள் வெளியீடு





சுவாமி ஆத்மகனானந்தாவின்
சிறப்புப் பேட்டி

பம்பலப்பிட்டி புதிய கதிர்வேலாயுத சுவாமி
கோயிலின் முகப்புத்தோற்றம்

# இந்து கலாசாரம்

மலர் : 3 ஆடித் திங்கள் முதலாம் நாள் இதழ் : 8


## இலங்கையில் உலக சைவப் பேரவை இளை

உலக சைவப் பேரவையின் கிளை ஒன்று இலங்கையில் வெகுவிரைவில் அங்குரார்ப்பணம் செய்யப் படவுள்ளது. இந்தக் கிளையில் செயலாளர் உட்பட மொத்தம் பதினைந்து உறுப்பினர்கள் அங்கம் வகிக்க உள்ளனர்.

இலங்கைப் பூராவிலும் சைவத்திற்கும் தமிழுக்கும் பல்வேறு வகையில் தொண்டாற்றிவரும் சைவ மக்கள் மத்தியிலிருந்தே இந்த குழுவினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலண்டன் மெய்கண்டார் ஆதீன முதல்வர் தவத்திரு சுவாமி சிவநந்தி அடிகளார் உலகப் பூராவிலும் சைவம் தழைத்தோங்க வேண்டும் என்ற பெரு நோக்கோடு உலக சைவப் பேரவையை இலண்டனில் அமைத்தார். இதன் கிளைகளை 'உலகம் பூராவிலும் அமைப்பதற்கு ஏற்பாடுகளை மிகத்துரிதமாக செய்துவருகின்றார்.

இலங்கையில் இந்த உலக சைவப் பேரவையின் கிளையினை அமைக்கும் பாரிய பொறுப்பினை கொழும்பு இந்து கலாசார மன்றத்தினருக்கும் அதன் நிர்வாகி சேவாரத்தினம் திருமிகு ஏ. எம். துரைசாமி அவர்களுக்கும் வழங்கியுள்ளார்.

இலங்கையில் எத்தனையோ பெரிய இந்து நிறுவனங்கள் இருக்கின்றபோதிலும், இந்த மாபெரும் தலையாய கடமையினை கொழும்பு இந்து கலாசார மன்றத்தினருக்கு வழங்கியமை இம்மன்றத்தின் சிறந்த போக்கினை எடுத்துக்காட்டுவதாகத் தெரிகிறது.

இந்த உலக சைவப் பேரவை நாடளாவிய ரீதியில் சைவ சமயத்தின் சிறப்புகளையும், சித்தாந்தக் கோட்பாடுகளையும், மக்கள் மத்தியில் எடுத்தியம்பி சைவத்தின் காப்பாளர்களாகத் திகழவுள்ளனர். அத்துடன் சைவ சமயத்தின் அருமை பெருமைகளை உலகறியச் செய்யவும் உள்ளனர்.

இன்றைய இலங்கையில் காட்டுத்தீப்போல் பரவிவரும் மதமாற்றத்தினை தடுப்பதற்கும் பல்வேறு வகையில் முயற்சிகளையும் செய்ய திடசங்கற்பம் பூண்டுள்ளதாகத் தெரியவருகிறது. மேலும் பல அரிய செயல் திட்டங்களையும் சைவ உலகத்தில் அமுல் நடத்த வழிவகைகளை மேற்கொள்ள உள்ளனர்.

உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளைக்கு சைவர்களாகிய அனைவர்களும் வித்தியாசம் இன்றி அதன் வளர்ச்சிக்கும், அது எடுத்து வரும் நல்ல செயல் திட்டங்களுக்கும் தமது ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளித்து உதவ முன்வர வேண்டும்.

சைவ சமயம் எமது சமயம் !

சைவப் பேரவை எமது பேரவை !!

## மனமாரப் பாராட்டுகிறோம்!



லயன்ஸ் திரு. எஸ். சி. பழனிசாமி

'தகவம்' என்ற ஒரு அமைப்பு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சிறந்த சிறுகதை எழுத்தாளர்களை தேர்வுசெய்து மூன்று பரிசுகளை வழங்கிவருவதை நேயர்கள் அறிவார்கள். இந்த தகவம் என்பதன் விரிவு தமிழ்க் கதைஞர் வட்டம்' என்பதாகும்.

இந்த இலக்கிய அமைப்பின் மூல கர்த்தாவாக இருந்து எழுத்தாளர்களை ஊக்குவிக்கின்ற ஒரு அருமையான பணியை மேற்கொண்டுவருகின்றார். திரு. எஸ். சி. பழனிச்சாமி அவர்கள்.

ஒரு பிரபல நிறுவனத்தில் நிதித்துறை முகாமையாளராகப் பணிபுரிகின்றபோதும், தான் கொண்ட இலக்கிய, ஆர்வம் காரணமாக இலைமறை காயாக இருந்து எழுத்தாளர்களைப் போற்றுகின்ற திரு. பழனிச்சாமி அவர்களின் நல்லெண்ணப் பணிகளை மனமாரப் போற்றுகின்றோம்.

அண்மையில் கொழும்பு நகர லயன்ஸ் கிளப் தலைவராக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. பழனிசாமி அவர்கள் அவரது சமூகப்பணிகளுக்காக லயன் பிரமுகர்களின் பாராட்டையும் பெற்றவர்.

தனது லயன்ஸ் கிளப் மூலம் கொள்ளுப்பிட்டிப் பகுதியிலுள்ள வறிய மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் என்பவற்றை அவர் வழங்கி உதவினார். இங்ஙனம், நல்ல பணிகளை ஆற்றுகின்ற திரு பழனிசாமி அவர்கள் எமது 'இந்து கலாசாரம்' இதழின் நல்லபிமானி. சிறந்த சாயி பக்தர்.

அவர் தம் பணிகள் மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

— ஆசிரியர்

# அகில இலங்கை இந்து மாமன்ற கட்டிடமும் இலங்கை இந்துக்களும்

— எஸ். தெய்வநாயகம் —

இலங்கையில் இந்து சமயம், இராவணன் காலத்துக்கு முன்பே பெருமை பெற்றிருந்தது. என்பதற்கு திருஞானசம்பந்தரின் இராவணன் மேலது நீறு என்னும் பதிகம் சாட்சி பகர்கின்றது. திருமூலர் கூட இலங்கையைச் சிவ பூமி எனக் குறிப்பிட்டுள்ளார். அத்தகைய பெருமை பெற்ற இலங்கையில் இந்துசமயமே, முதன்மை பெற்றிருந்தது என்பதற்கு பல சான்றுகள் உண்டு. இராமேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னீஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற ஐந்து ஈச்சரங்கள் இலங்கையில் இருந்ததாகவும், இராமேஸ்வரம் கடல் கோளினால், இந்தியாவுடன் துண்டாடப்பட்டதன் பின், நான்கு ஈச்சரங்களும், இலங்கை சிவ பூமிக்கு மெருகூட்டுகின்றன. கி. மு. 400 ஆண்டுகளில் கூட சிவமணம் சூழ்ந்த பூமியாக இலங்கை விளங்கியது என்பதற்கு, போதிய ஆதாரங்கள் உண்டெனலாம்.

விஜயனின் வருகையின் பின் பௌத்தசமயம் வேரூன்றத் தொடங்கியது. ஆனால் விஜயன் கூட காலி தேவந்திர முனையில் ஒரு சிவனாலயம் அமைத்தான் என்பதற்கும் ஆதாரமுண்டு. புவனேகபாகு, பராக்கிரமபாகு, கஜபாகு, போன்ற சிங்க மன்னர்கள் கூட சிவனாலயங்களை இலங்கையில் அமைத்தோடு, பழுதடைந்த ஆலயங்களைத் திருத்தியும் வழிபடவைத்தனர். அத்தகைய சிறப்பு மிக்க தன்மையுள்ள இந்துசமயம் இலங்கையில் வேரூன்றி இருந்தபோதிலும், இந்துக்களின் மனம் மட்டும் பரந்த அளவில் செயல்படவில்லையென்றே கூறலாம். பௌத்த ஆலயங்களில் இந்து தெய்வங்கள் உண்டு அவர்களும், இந்து ஆலயங்களுக்கு வந்து வழிபட்டு வருகின்றார்கள். நம்பிக்கை, உள்ளத் தெளிவு பிறப்பதே அதற்குக் காரணம் என்று சொல்லலாம். அவர்களுக்கு பிறக்கும் உள்ளத் தெளிவு, சைவர்களாக எமக்கு ஏன் ஏற்படவில்லை. பணத்துக்காகவும், வசதிகளுக்காகவும் மதம்மாறி வாழ்க்கையை சாகடிக்கவும், சிலரின் நிலைக்கும் இந்துக்களாகிய நாமே காரணமாக இருக்கின்றோம். பொன்னும் பொருளும், வசதிகளும் வேண்டியே அன்றாடம் கடவுளை வழிபடும் இந்துக்களில் யாராவது 25 வருடங்களாக முடிவுபெறாமல் இருக்கும் அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டிடம் உருவாகி, அதன் கம்பீரத் தோற்றத்தைக் காண வேண்டும் அதற்கு அருள் புரிய வேண்டும் என்று யாராவது இறைவனிடம் கேட்டார்களா, இல்லையே, இல்லை, அப்படிக் கேட்டிருந்தால், நாயன்மார்களுக்காகவும், அடியார்களுக்காகவும் ஓடிச் சென்று உதவிய இறைவன், நிச்சயம் ஓடிவந்து குறையை போக்கியிருப்பார். காலத்துக்குகாலம் வந்த நிர்வாகம் எடுத்த முயற்சிகள் யாவும் வீணடிக்கப்பட்டன.

## நினைவஞ்சலி



அமரர் திரு. பாலசுப்பிரமணியம்
(முன்னாள் தலைவர்
அகில இலங்கை இந்து மாமன்றம்)

நேபாளத்தில் மாத்திரம் இந்து இராச்சியம் உண்டு. 1979ம் ஆண்டில் இருந்து இலங்கையில் இந்து சமயத்திற்கென ஒரு தனி அமைச்சு உருவாக்கப்பட்டு, அன்றிலிருந்து இன்றுவரை, அமைச்சின் செயற்பாடுகள், இந்து சமய வளர்ச்சிக்கு மெருகூட்டி வருகின்றன. அப்படி அரசு ஆதரவு பொருந்திய இந்து சமயத்தில் உள்ள இந்துக்கள் தங்களுக்கென்று தங்கள் தன்மான, உணர்வுக்கென்று தலைநகரில் ஒரு கட்டிடம் உருவாக வேண்டும் என நினைத்திருந்தால் அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டிடம் எப்பவோ நிறைவு பெற்றிருக்கும். பத்து மாடியல்ல பதிநான்கு மாடி கட்டிடமே கம்பீரமாக நிலை பெற்றிருக்கும். ஆனால்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## அகில இலங்கை . . . . .

(முன்பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இந்துக்களின் மன நிலையில் அப்படி ஒரு உத்வேகமோ, மற்றச் சமயத்தவரை போல் வாழும், சிறப்புடன் வாழ வேண்டும் என்ற மன நிலையோ தோற்றம் பெறவில்லை.

அரசியல் நிலையில், காலத்துக்கு காலம், வந்த தமிழ் அரசியல் வாதிகளுக்கும், பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கும் கூட இப்படியான ஒரு கட்டிடம் தோற்றம் பெற வேண்டும் எண்ணம் தோன்ற வில்லையென்றே சொல்லலாம். ஏனெனில் அவர்கள் யாவரும் தங்கள் பாராளுமன்ற கதிரைகளில் கவனம் வைத்தார்களே தவிர பாதியில் நின்றிருக்கும் கட்டிடத்தை முடிப்போம், அதன் மூலம், பார் புகழும் இந்துக்கள், இலங்கையில் உண்டு என மார்தட்டுவோம் என நினைத்தார்கள் இல்லை. அப்படி நினைத்திருந்தால், பதிநான்கு மாடி கட்டிடம் போல் நான்கு கட்டி முடித்து இந்நாட்டில் உள்ளவர்களுக்கு வாழும் ஒரு "இந்துக்கள் என்று பறைசாற்றியிருப்பார். வந்த நிர்வாகங்கள் அனைத்தும் 'நிதியுள்ளவர்கள் அள்ளித் தாரீர்' என அறைகூவல் விடுத்தபோதும் அந்த அறைகூவலைச் செவிமடுத்தவர்கள் யாரும் இலங்கையில் இருந்ததாகத் தெரியவில்லை. ஒரு சிலரே தொடர்ந்து தங்களால் முடிந்தவரை உதவி வந்துள்ளார்கள். அள்ளிக்கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை, கிள்ளிக் கொடுத்திருந்தாலே பாரிய தொகை சேர்ந்து பார் புகழும் கட்டிடமாக அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டிடம் தோற்றம் பெற்றிருக்கும்.

ஒருசிலர் இந்துமாமன்ற நிர்வாகத்தில் குறை கூறலாம். பதவிக்காகவும் படாடோபத்துக்காகவும் செயற்பட்டார்கள் என்றுகூடச் சொல்லலாம். இப்போது இருக்கும் உத்வேகம் அப்போது இருந்திருந்திருந்தால் கட்டிடம் முடிந்திருக்கும் என்ற கதையையும் சொல்லலாம். அப்படி கட்டிடம் முடிந்திருந்தாலும் 1983ல் வந்த கலவரத்தினால் அழிக்கப்பட்டிருக்கும் என்ற யூகத்தையும் சொல்லலாம். இதுவெல்லாம் கையால் ஆகாதவனும் கருணைமனம் இல்லாதவனும் சொல்லும் வார்த்தை. வள்ளுவரையும் பாரதியையும் உவமைகூறி பேசுவதைவிட, இராமக்கிருஷ்ணரையும் விவேகானந்தரையும் ஆதாரம் காட்டி சமயப்பற்றுடையவர்போல் இருப்பதைவிட ஆலயங்களில் பால் சொரிந்து அபிஷேகம் செய்து லட்சார்ச்சனை சந்தனக்காப்பு என்பவைகளை செய்வதையும்விட இப்படியான இந்துக்களுக்குரிய கட்டிடம் ஒன்றை உருவாக்கி அதன்மூலம் பயன்பெறுவது ஒரு சிறப்பான கைங்கரியமாகும். ஒருவர்மேல் ஒருவர் ஒருவர் குறை கூறுவதே ஒரு வாழ்க்கையாகிவிட்டது. அந்த வாழ்க்கையே பலரும் கடைப்பிடித்து வருகிறார்கள். தானம் பண்ணும்போது அது ஒரு தரமாக இருக்கவேண்டுமென நினைத்தால் தானத்துக்கு மதிப்பு இராது. மனதால் இரங்கி இல்லாதவர்களுக்கு கொடுக்கும்போது அங்கு தானத்துக்கு மதிப்பு ஏற்படுகின்றது.

இலங்கையில் உள்ள இந்துக்கள் என்று கூறும் சைவசமயத்தவர் ஆளுக்கு பத்து ரூபா வீதம் கொடுத்தாலே ஒரு கோடி ரூபாய்க்குமேல் சேர்ந்துவிடும். அந்தளவு சமயப்பற்று உள்ளவர்கள் இந்துக்கள். விரதங்களையும் விழாக்களையும் மிகவும் புனிதமாக பேணி பெருமை காண்பவர்கள். அத்தகையவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டிடம் பல மாடிகளைக்கொண்டதாக எழுந்திட கைகொடுத்து உதவ முன்வரவேண்டும்.

தாம் நாளாந்தம் செய்யும் அனாவசியமான செலவுதொகையில் ஒரு சிறு தொகை சேகரித்து வழங்கலாம். சினிமா பார்க்கும் அன்பர்கள், ஒரு சினிமா பார்க்கும் தொகையை தியாகம் செய்யலாம். காலிமுகத்திடலுக்கு அடிக்கடி செல்லும் தலைநகரில் உள்ளவர்கள் அங்கு செலவு செய்யும் தொகையை இதற்குக் கொடுக்கலாம். ஆலயங்களில் இறைவனை வேண்டி அர்ச்சனை செய்யும் தொகையைக்கூட ஒரு நாளில் கொடுக்கலாம். இவைகள் வசதி குறைந்தவர்களால் செய்யப்படும் தியாக அன்பளிப்பு. வசதி உள்ளவர்கள் வியாபாரிகள், தம் இலாபத்தில் ஒரு சிறு தொகையைக் கொடுத்தாலே போதும். பெரும் தொகைப் பணம் கிடைத்துவிடும் உத்தியோகஸ்தர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை இக்கட்டிடத்திற்காக கொடுத்து உதவலாம். காண்டம் பார்ப்பவர்கள்கூட இந்த கட்டிடத்துக்கு உதவலாம்.

பேருக்கும் புகழுக்கும் நிதிகள் கொடுத்து பாராட்டுப் பெறுவதைவிட, எமது சமய உணர்ச்சிக்கு வித்திடும் தலைநகர் இந்து மாமன்றக் கட்டிடத்தை துரித கெதியில் முடித்திட உதவி வழங்குவது நமது இந்துக்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். இந்து ஆசிரியர்கள் இந்து மாணவர்கள் இந்து உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைப்பு நல்கினாலே போதும் மாபெரும் கட்டிடம் தலைநகரில் காட்சி தரும். பாராளுமன்றத் தமிழ் இந்து பிரதிநிதிகள்கூட இந்த விடயத்தில் கைகொடுத்து உதவலாம். எதற்கும் இலங்கை இந்துக்கள் மனதில் தன்மானத் தன்மை உருவாகுமேயானால் உயர்ந்த இலங்கை இந்துமாமன்றக் கட்டிடம் உருவாகும் என்பதில் ஐயமில்லை. இந்துமாமன்ற நிர்வாகிகள் பேச்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்

## அகில இலங்கை . . . . .

(முன்பக்கத் தொடர்ச்சி)

சளிலும் எழுதுவதிலும் நின்றுவிடாமல் இலங்கை இந்துக்களிடம் தங்கள் மதிப்பீடுகளை முன்வைத்தால் நிச்சயம் மாபெரும் கட்டிடம் தலைநகரில் உருவாகி இந்துசமயத்துக்கும் அதன் வளர்ச்சிக்கும் மேலும் மெருகூட்ட வழிசெய்வார்கள்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்'' யார் அவன் தனது மனதினாலும் வாக்கினாலும் நல்லதைச் செய்பவனே அந்த நல்லதைச் செய்யும் மனோநிலை எல்லோருக்கும் வளரவேண்டும் மரம் வளர தண்ணீர் ஊற்ற வேண்டும். மனம் வளர, தமது சமயத்தையும், அதன் பெருமையையும் உணர்ந்து இறைவனை நாளாந்தம் வழிபடுவதோடு, இறையருள் கூடிய செயல் திட்டங்களுக்கு கைகொடுத்து உதவவேண்டும். அப்போதுதான் நமது சமயம், என்று மார்தட்டிக் கொள்ளலாம். துன்பத்தில், துயரில் கைகொடுக்காமல் இன்பத்தில் கலந்துகொள்வது அழகல்ல. தற்போதைய நிலையில் இலங்கை இந்து மாமன்றத்துக்கு அதன் வளர்ச்சிக்கு தமிழ் பிரதேசங்களில் உள்ள இந்து ஆலயங்களும், மன்றங்களும் நலன் விரும்பிகளும், தருமசீலர்களும் முன்வந்து நிதி சேர்த்து, கட்டிடத்தைக் கட்டுவிப்பதோடு, வருங்கால சந்ததியினருக்கு ஒரு வழிகாட்டியாக நிற்க வேண்டும். துணிந்து செல், தொடர்ந்து செல் தோல்வி கிடையாது என்பதுபோல, இலங்கை இந்துக்கள், இந்து மாமன்ற கட்டிடப் பணிக்கு தங்களால் முடிந்த உதவிகளை நல்கும்போது அது இறைவனுக்குச் செய்யும் காணிக்கையாகவும் அர்ச்சனையாகவும் அமைவுபெறும். மறு பிறப்புக் கொள்கையில் நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு இந்துவும் இப்பணிக்கு நிச்சயம் உதவ முன்வருவார். அதன் மூலம் அவர் ஆத்மா நன்னிலை பெறும். ஒரு மாபெரும் கட்டிடத்துக்கு எனது பங்கும் சேர்ந்துள்ளதே என்று சாந்தி பெறும்.

---

பேசாத வார்த்தைக்கு நீ எஜமான். பேசிய வார்த்தை உனக்கு எஜமான். பேசிய பிறகு வருந்துவதைவிட பேசுவதற்கு முன்பே யோசனை செய்வது மிகவும் உசிதம்.

— ஆங்கிலப் பழமொழி

---

# நமது வாழ்த்து



திரு. கே. பாலசுப்ரமணியம்

கும்பனித்தெரு, அருள்மிகு சிவசுப்ரமணிய சுவாமி கோவில் தர்மகர்த்தா சபைச் செயலாளரும், கும்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்க பொதுச் செயலாளருமான திரு கே. பாலசுப்ரமணியம் அவர்கள் 6-10-92 செவ்வாய்க்கிழமை காலை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் சமாதான நீதிபதியாக சத்தியபிரமாணம் செய்து கொண்டார். நீதிமன்றத்தில் நண்பர்களும் உறவினர்களும் திரளாக சமுகமளித்து மலர்மாலைஅணிவித்து வாழ்த்தினர். நாமும் வாழ்த்துகிறோம்.

---

## ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேசம்

வாஸ்தவமான ஞானம் உண்டானவன் ஈசுவரன் வெகுதூரத்திலிருப்பதாகக் காண்பதில்லை. ''அவன்'' என்று எட்ட இருப்பதுபோல் இல்லாமல் ''இது'' என்று இங்கே அவனுடைய உள்ளத்திலேயே இருப்பதாக அவன் உணர்கிறான். ஈசுவரன் எல்லாரிடத்திலும் இருக்கிறான். ஆகவே தேடுபவர்களுடைய காட்சிக்கு அவர்களிடமே அவ் ஈசுவரன் தென்படுகிறான்.

---

புயற்காற்று அடிக்கும்போது அரசமரம் இன்னது, ஆலமரம் இன்னது என்று வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது. அதுபோல பக்தி என்னும் புயற்காற்று ஒருவனுக்குள் அடிக்கும்போது அவனிடம் ஜாதிபேதம் இருக்கமுடியாது.

# அறநெறிப் பாடசாலைகள் எதிர்கால இந்துசமய மறுமலர்ச்சிக்கு வித்திடும்

## கருத்தரங்கில் அமைச்சர் தேவராஜ்

''ஆலயங்கள் தோறும் அறநெறிப்பாடசாலைகள் இயங்கவேண்டுமென்பதை நாம் தீவிர இயக்கமாக மேற்கொண்டுள்ளோம். இது வெறும் சமய போதனை மட்டுமல்ல, எதிர்காலத்தில் எமது சமயத்தின் மறுமலர்ச்சிக்கும், புத்துணர்வுக்கும் கூட இந்த இயக்கம் வழிசெய்யுமென்பதே எமது பிரதான நம்பிக்கை''

இவ்வாறு அண்மையில் இந்து சமயத்திணைக்களக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான முழுநாள் கருத்தரங்கில் பேசும்போது இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் குறிப்பிட்டார். இவ்வமர்வின் போது, அறநெறிப்பாடசாலை கற்பித்தலுக்கான பாடத்திட்டம், ''சைவசமய காலம்'' ''பன்னிரு திருமுறைத்திரட்டு'' ஆகிய நூல்கள் என்பனவும் வெளியிடப்பட்டன அமைச்சர் தேவராஜ் இங்கு தொடர்ந்து பேசுகையில்.

நாம் ஆலயங்களை சமூக மத்திய நிலையங்களாக உணர்த்திவருகின்றோம். வாழ்வின் படிப்பினைகள் ஆலயத்திலே ஆரம்பமாக வேண்டும், நல் எண்ணங்களாகிய வித்துக்களை இளம் மனங்களிலே விதைத்துவிடுவதை நாம் ஒரு சமயத் தொண்டாக அன்றி சமூகப்பணியாக அமைத்தாக வேண்டும். இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே அறநெறிப்பாடசாலைகள் இயங்கவேண்டும். அதுவும் ஆலயங்கள்தோறும் சின்னஞ் சிறுவர்கள் சூழ்ந்திருக்கும் நிலைவேண்டும் — என நாம் வலியுறுத்துகின்றோம்.

இத்தகைய அறநெறி வகுப்புகள் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் நடாத்தும் ஞாயிறு வகுப்புகள் மிகவும் முன்மாதிரியானவை, விடுமுறை நாட்களில் அங்கு பயிலும் சிறுவர்கள் மனதிலே அன்புணர்வும், அழகுணர்ச்சியும், தெய்வீகமும் ஊட்டப்படுகின்றன.

இதேபோன்று நாடெங்கும் உள்ள ஆலயங்கள் புனிதமான எண்ணங்களோடு அறநெறிப் பாடசாலைகள் நடப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இதனை இந்து மன்றங்கள், ஆலய நிர்வாகங்கள் பொறுப்பேற்குமாயின் எமது அமைச்சும் பூரண ஒத்துழைப்பு நல்கும் எனக்குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் அமைச்சின் செயலாளர் திரு. கா. தயாபரன் திணைக்களப் பணிப்பாளர், திரு. க. சண்முகலிங்கம், பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா, புலவர் க. சிவானந்தன், திருமதி. பூமணி குலசிங்கம், உட்பட இன்னும் பலரும் உரை நிகழ்த்தினர்.

செய்தி: அன்புச் செல்வன்

## கடவுளும் நமக்கு கைதரமாட்டார்

செல்வன் க. ரெட்ணையா
குறிஞ்சாமுனை

சண்டைகள் ஓர்நாள் சவப்பெட்டி ஏறும்
சமாதானம் நம்மைத் தழுவிடவரும்
மண்டைகள் உடைப்போர் மனம் மாறிடக் கூடும்
மண்மீது வசந்தம் மறுபடி தோன்றும்
அண்டைய வீட்டாரை அண்ணன் தங்கையாய் மதித்து
அன்பு காட்டினால் ஒற்றுமை வளரும்
கண்டுமே தப்பைக் காணாது வாழ்ந்தால்
கடவுளும் நமக்கு கைதர மாட்டார்.

புரட்சிகள் செய்வோர் புளுதியில் வீழ்வார்
புவியினில் நாம் கண்ட உண்மையிதுவே
வரட்சியினாலே பயிர்கள் வாடும் — சிலர்
வார்த்தையினாலே மனமும் வாடும்
இரட்சிப்புதானே நாம் செய்யும் செயல்கள்
எனச் சொல்லுவார்கள் கொலைகாரக் கும்பல்
காத்திலே வாள் ஏந்தி மரத்தினை வெட்டினால்
கடவுளும் நமக்கு கைதர மாட்டார்.

கலவரம்தானே மகிவானதொன்று — எனக்
காளையர் சொன்னால் அது தவறாகும் — மனித
குலத்தையே அழிக்கும் கொடுமைகள் தன்னை
கொளுத்திடுவோம் நாம் வேருடன் இன்று
வலக்கரம் கொடுப்பதை இடக்கரம் அறிந்தால்
வழக்காடப் போகும் எனக் கூறிக் கொண்டு
கலகத்தைச் செய்து உலகத்தை அழித்தால்
கடவுளும் நமக்கு கைதர மாட்டார்.

# இன்றைய சாதி வேற்றுமைகள் இடைக்காலத்தில் உருவாக்கப்பட்டவையே!

— ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தா —

இளமையிலேயே முதிர்ந்த ஆத்மீக அறிவுகளையும், சமய சம்பந்தமான கருத்துக்களை எளிய முறையில் விளங்கக்கூடிய வகையில் உபதேசம் செய்பவரும், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவருமான ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தா இந்து கலாசாரத்திற்கு அளித்த சிறப்புப் பேட்டி.

பேட்டி கண்டவர்: நா. ஹரிதாஸ்

★ **கேள்வி:** இந்து மதத்தைப்பற்றி உங்கள் கருத்துக்களை கூறுவீர்களா?

● **பதில்:** இந்துமதமே உலகின் மூத்த மதமாகும். இன, மத, கருத்து வேறுபாடின்றி உலகிலுள்ள அனைத்து மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே மதம் இந்துமதம்தான். இந்து தர்மத்தை அமெரிக்கர்கள், ஐரோப்பியர்கள்கூட அக்கறையுடனும் ஆர்வத்துடனும் ஆராய்ந்து அதன் உயர்ந்த கருத்துக்களையும் உண்மைகளையும் உணர ஆரம்பித்திருக்கின்றார்கள். வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்தது இந்துமதம். வாழ்வில் உயர்வடைவதற்கு சகல அம்சங்களையும் போதிப்பது இந்துமதமே. உயர்ந்த தத்துவங்களையும் நல்லொழுக்கத்தையும் அன்பையும் பண்பையும் உணர்த்துவது இந்துமதமே. சுருங்கக் கூறின், முற்றுமுழுதாக சகல அம்சங்களையும் உள்ளடக்கியதும், உயிர்களுக்கு மதிப்பளிக்கக்கூடிய ஒரே மதமும் இந்துமதமேதான்.

ஆனால், இந்து மதத்தை தழுவும் இன்றைய சமூகத்தினர் அதனை ஒரு கேலிக்கூத்தாக்கிக் கொண்டு வருகின்றனர். இந்துமதத்தை ஒரு புரோகிதத் தொழிலாகக் கருதுகின்றனர். ஏனைய மதத்தவர்கள் பார்த்து சிரிக்கக்கூடிய அளவிற்கு இந்து மதத்தை வியாபாரக் கருவியாக பயன்படுத்தி வருகின்றனர். இது வேதனைக்குரியது.

★ **கேள்வி:** இந்து சமூகத்தவர் மத்தியில் இன்று நிலவும் சாதி வேற்றுமைகள் மனித அவதாரம் தொட்டே வழக்கிலுள்ளதா?

● **பதில்:** இந்த உலகிலுள்ள அனைத்து பொருட்களிடத்தும் வேற்றுமைகள் நிலவுவதைக் காணலாம். வேற்றுமை என்பது இயற்கையின் நியதி. கடவுள் ஒருவரே வேற்றுமைக்கு அப்பாற்பட்டவர். மனிதர்களிடம் காணப்படும் குணாதிசயங்களை அடிப்படையாக வைத்து அவர்களை நான்கு வர்ணத்தவர்களாக பிரித்துள்ளனர் நமது முன்னோர்கள். ஆனால் இன்று இம்முறை நலிவடைந்து பிறப்பை அடிப்படையாகக் கொண்டு சாதிமுறை பின்பற்றப்படுகின்றது. இன்றைய சாதிமுறைகள் இடைக்காலத்தில் உயர்ந்த பண்பில்லாத மனிதர்களால் உருவாக்கப்பட்டதே. வேதகாலத்தில் உருவாக்கப்பட்டதல்ல.

★ **கேள்வி:** நமது வேதங்கள், சாஸ்திரங்கள், இதிகாசங்கள் என்பன சாதி பாகுபாட்டிற்கு மதிப்பளிக்கின்றனவா?

● **பதில்:** வேதங்கள், சாஸ்திரங்கள், இதிகாசங்கள் போன்ற எதுவுமே மனிதர்களிடையே உயர்வு தாழ்வு கற்பிப்பதில்லை. ஆனால் இன்றைய சமுதாயம் தனது சுயநலத்தை வேண்டி மக்களிடையே சாதி வேற்றுமையை பாராட்டுகிறது. இது முற்றிலும் தவறானது. இந்துமதம் மானிட உயிர்களுக்கு சமத்துவமாக மதிப்பளிக்கின்றது.

★ **கேள்வி:** எமது சமூகத்தவர் கடைப்பிடித்து பேணி வரும் இந்த சாதி வேற்றுமைகளைப்பற்றி உங்களது கருத்து என்ன?

● **பதில்:** சத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் எனும் மூன்று குணங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதப்பிறவிகளை பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் எனும் நான்கு வர்ணத்தவர்களாக (சாதிகளாக) பகவத்கீதையில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது.

ஒரு மனிதனிடத்தில் மேற்கூறிய மூன்று குணங்களுமே ஒருங்கே அமைந்து கிடக்கின்றது. இவற்றில் ஏதாவது ஒன்று முன்னணி வகிக்கும்போது ஏனைய இரண்டுமே பின்னணி வகிக்கின்றன. அப்படி முன்னணி வகிக்கும் குணத்தைக் கொண்டே அவன் எப்பிரிவினன் என கணிக்கப்படுகின்றான்.

உயர்ந்த பண்புகள் அனைத்தையும் ஒருங்கே அமைந்த மனிதன் பிராம்மணன் ஆகின்றான். இந்த பிராம்மணன் எந்த சமூகத்திலாவது, எந்தக் குடியிலாவது எக்காலத்தில் வேண்டுமானாலும் தோன்றலாம். மன பரிபாகத்தையும் வாழ்க்கை முறையை

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## இன்றைய சாதி . . . .

(முன்பக்கத் தொடர்ச்சி)

யும் பார்த்து ஒருவனை பிராம்மணன் என்கிறது வேதாந்தம். ஆனால் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு ஒருவனை பிராம்மணன் என்கிறது லௌகிகம்.

அறம் அல்லது தர்மமே வடிவெடுத்தவன் க்ஷத்திரியன் ஆகின்றான். சமூகத்தினது வாழ்க்கையை ஒழுங்குபடுத்துதல் அவனது வாழ்க்கைக் கடமையாகும். க்ஷத்திரியன் என்பவன் எச் சமூகத்திலாவது எந்தக் குடியிலாவது அவதரித்திருக்கலாம்.

சுதந்திர வாழ்க்கை வாழ்ந்து பணத்தை பெருக்குபவர்கள் வைசியர்கள் எனப்படுகின்றார்கள். இகலோக வாழ்க்கைக்கு இன்றியமையாத தன தானியங்களை விருத்திபண்ணுவதும், மூலப் பொருள்களை சேகரிப்பதும் அவைகளைப் பயன்படுத்தி பயன்படும் பொருள்களாக மாற்றியமைப்பதும் வாணிபத்தின் பொருள்களை நாலாபக்கங்களிலும் பங்கிட்டுக் கொடுத்தலும் வைசியதர்மமாகும்.

பிறரிடத்து வேலைக்காரனாயிருந்து இட்ட வேலை செய்து சம்பளம் ஏற்று ஜீவிப்பவன் சூத்திரன் ஆகின்றான் அதாவது உடல் வாழ்க்கை ஒன்றில் மட்டும் கருத்து வைத்திருப்பவன் சூத்திரன் ஆகின்றான்.

மேற்கூறிய சாதிகள் இருக்கலாம். ஆனால் அவற்றிடையே உயர்வு தாழ்வுகள் இருத்தலாகாது.

அனைவருக்கும் எல்லா இடங்களிலும் சம உரிமைகள் வழங்கப்படல் வேண்டும்.

★ **கேள்வி:** ''இந்து கலாசாரம்'' எனும் இந்த சஞ்சிகை எந்த வகையில் சமுதாயத்திற்கு பணியாற்ற வேண்டும்?

● **பதில்:** சமயம் சம்பந்தமான நல்ல கட்டுரைகள்; நற்பண்புகளால் நற்செய்கைகளால் சமுதாயத்தில் மதிக்கப்பட்ட மகான்களைப் பற்றிய வாழ்க்கை சரித்திரங்களையும், நல்ல தத்துவங்களையும் மக்களுக்கு எளிதில் விளங்கக்கூடியதாக நல்ல கருத்துக்களையும் பத்திரிகையில் இடம்பெற செய்யவேண்டும். சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பாடுபட வேண்டும்.

★ **கேள்வி:** அண்மைக் காலமாக இந்து மதத்தவர்கள் பலர் மதம் மாறிக்கொண்டு வருகின்றனரே இதற்கான மூலகாரணம் எதுவாக இருக்கலாம்?

● **பதில்:** எமது மதத்தவர்கள் தாமே தமக்குள் மேல்சாதி கீழ்சாதி என்றும், தீண்டத் தகாதவர்கள் என்றும் உருவாக்கிக்கொண்டு இந்து சமுதாயத்தின் மத்தியில் வேறுபட்ட உணர்வுகளை உருவாக்கி விட்டனர். இவ்வாறு உருவாக்கிய இந்த உயர்ந்த சாதி சமூகத்தினர் தாழ்ந்த சாதி சமூகத்தினரை மதிப்பதில்லை. அவர்களது இன்ப துன்பங்களிலும் கலந்துகொள்வதில்லை. அநேகமாக, இவ்வாறு உருவாக்கப்பட்ட இந்த தாழ்ந்த சாதி சமூகத்தினர் ஏழைகளே. ஏழ்மையினால் அவர்கள் படும் கஷ்டங்களிற்கும், பசிப் பட்டினியால் வாடும்போதும் உயர்ந்த சாதி சமூகத்தினர் இந்த தாழ்ந்த சாதி சமூகத்தினருக்கு உதவி உபகாரங்கள் வழங்குவதாக இல்லை. தீண்டத் தகாதவர்கள் என ஒதுக்கியே விட்டுவிட்டனர்.

இதனால் வாழ்க்கையில் விரக்தி அடைந்து தமது மதத்தின் மீதும் வெறுப்படைந்து வாழும் தருணத்தில், ஏனைய மதத்தவர்கள் வழங்கும் உதவியினாலும், உபகாரத்தினாலும், பண உதவியினாலும் பெரிதும் கவரப்பட்டு எளிதில் மதம் மாறிவிடுகின்றனர். ஆகவே இந்துக்கள் மதம் மாறுவதற்கு இந்து சமுதாயமே காரணகர்த்தாவாகும்.

இங்கு இந்து மதத்திலிருந்து ஏனைய மதத்திற்கு மதம் மாறுகின்றார்கள். மேலை நாட்டில் வேற்று மதங்களிலிருந்து இந்து மதத்திற்கு மதம் மாறுகின்றனர்.

★ **கேள்வி:** மதம் மாற்றத்தை தடுப்பதற்கு இந்து இளைஞர் மன்றத்தினருக்கு தாங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?

● **பதில்:** இந்து இளைஞர்கள் தெருத்தெருவாக, வீடு வீடாகச் சென்று இன்றைய மனிதர்கள் கணித்துள்ள இந்த தாழ்ந்த சாதியினரை இனங்கண்டு அவர்களுடன் சகோதரத்துவமாக, சமத்துவமாக எதுவித கருத்து வேறுபாடின்றி ஒற்றுமையாக பழக வேண்டும். அவர்களையும் விழாக்கள் வைபவங்களுக்கு உரிய முறையில் அழைப்பு விடுத்து அவர்களுக்கு சம அந்தஸ்து வழங்கவேண்டும். கல்வி சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளைப் பெற ஒழுங்குகளை செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

இந்து சமயத்தின் தாத்பரியங்களை விளங்கக் கூடியதாக அவர்களை மாற்றி அமைக்கவேண்டும். சமய சம்பந்தமான, கலாசாரம் சம்பந்தமான சொற்பொழிவுகளை அவர்கள் மத்தியில் ஆற்றுவதன் மூலம் அவர்களை இந்து சமயத்தில் கூடுதலாக ஈடுபாடுள்ளவர்களாக மாற்றியமைக்க முடியும். அடிமட்டத்திலிருந்து அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையுப் பெறுவதற்கு உதவி ஒத்தாசை வழங்கினால் அவர்கள் மதம் மாறுவதைப் பற்றி எள்ளளவும் எண்ணிப்பார்க்க மாட்டார்கள்.

# கீதையின் சாரம்

கோவை கே. ஆர். ராதாகிருஷ்ணன்

''உலக வாழ்க்கை துன்பம் நிறைந்தது. ஆனால் மனிதன் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபட்டு, என்றும் மாறாத பேரின்பத்தையே அனுபவிக்க விரும்புகிறான். அதற்குரிய வழிவகைகளையே கீதை காட்டுகிறது'' என்று மகாகவி சுப்ரமண்ய பாரதியார், கீதையின் சாரத்தை மிக அழகாக கூறியிருக்கிறார்கள்.

மக்களுடைய நல்வாழ்வை கருதியும், அவர்கள் வாழ்க்கையில் மேன்மை அடையும் வழிவகைகளை கூறியும், நமது முன்னோர்களான முனிவர்களும், ரிஷிகளும் பகவானுடைய அருளை பூரணமாகப் பெற்று, பல சாஸ்திரங்களையும், இதிகாசங்களையும் எழுதி, வைத்திருக்கிறார்கள். அவைகளில், தலைசிறந்ததும், மிகத் தொன்மையானதுமான வேதங்களின் சாரமாக விளங்குவது ''உபநிஷதங்கள்'' அதன் கருத்துக்களை தெளிவுபடுத்தி கூறியிருப்பது, ''பகவத் கீதை''.

சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன், வியாச பகவான் அவர்களால் இயற்றப்பட்ட ''மகாபாரதம்'' ஒரு லட்சத்து இருபத்தி ஐயாயிரம் சுலோகங்களை கொண்டது. அந்த அமர காவியத்தில், பீஷ்ம பருவத்தில், 18 அத்தியாயங்களில், 700 ஸ்லோகங்களில் கீதை கூறப்பட்டிருக்கிறது. நமது வாழ்க்கையின் நுணுக்கமான இரகசியங்களையெல்லாம் கீதையின் வாயிலாக பகவானே திருவாய் மொழிந்து அருளியதாக வியாசர் கூறுகிறார். ஏனெனில், கீதையின் விளக்கங்கள் அனைத்தும் சத்திய வாக்குகளாக இருக்கின்றன. வாழ்க்கையை முழுமையாக அறிந்து கொள்ள அதற்கு இணையான நூல் வேறு கிடையாது.

குருக்ஷேத்திர யுத்த பூமியில் எதிர் அணியில் அணிவகுத்து நின்ற பந்துக்களையும், நண்பர்களையும், பூஜிக்கத் தகுந்த பெரியோர்களையும் கண்டு, மனம் கலங்கி, சோர்வடைந்து உட்கார்ந்துவிட்ட அர்ஜுனனுக்கு பகவான் கீதையை உபதேசித்து, அவனுடைய மயக்கத்தையும், கலக்கத்தையும் நீக்கி, கோழையாகி நின்ற அவனுக்கு மீண்டும் போர் செய்யும் மனோவலிமையை கொடுத்து, அவனை ஒரு வீரனாக நிமிர்ந்து நிற்கச் செய்கிறார். அதேமாதிரி நமக்கும், வாழ்க்கையில் சோர்வும், விரக்தியும் ஏற்படும்போது நமது பயத்தை போக்கி நமக்கு புத்துணர்வையும், மனோ திடத்தையும் உண்டாக்க வல்லது ''பகவத்கீதை''.


பகவான் மனது வைத்தால், எந்த காரியத்தை தான் நிறைவேற்ற முடியாது? ஆனால், அவரே தூது சென்றும், மகாபாரத யுத்தம் நேராமல் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதற்கு காரணம் தீய சக்திகளான துரியோதனாதியர்களை அழிக்கவும், சத்திய சீலர்களான பாண்டவர்களை காக்கும் பொருட்டும் பகவானே போட்ட திட்டம்தான் 'பாரதயுத்தம்'

பாரதயுத்தம் நடைபெறாமல் இருந்திருந்தால் நமக்கு பகவத்கீதையே கிடைத்திருக்காது. அத்துடன் பகவானுக்கு அர்ஜுனன் மீதிருந்த கருணையினால் அவனுக்கு ஒரு பாடம் புகட்டவும் விரும்புகிறார். எவ்வாறெனில், அர்ஜுனன் தன்னிகரில்லாத ஒரு மாபெரும் வீரன். அவனுடைய வாழ்க்கையில் தோல்வி என்பதையே அறியாதவன். ஒரு சமயம் சிவபெருமானையே எதிர்த்து நின்று போர் புரிந்து அவரிடமிருந்து 'பாசுபதாஸ்திரம்' பெற்றவன். அவனுக்கு அவனுடைய பலத்தில் அபரிமிதமான நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக அவன் இறைவனின் மகிமையை பூரணமாக உணர்ந்து கொள்ள முடியவில்லை. அதனால் பகவான் கீதையை உபதேசிக்கும்போது ஆரம்ப நிலையில் அவரிடம் தர்க்கம்கூட செய்கிறான். அர்ஜுனனுடைய இந்த குறையை கீதையின் வாயிலாக அவனுக்கு உணர்த்தி, அவனுக்கு விழிப்புணர்வை உண்டாக்கி சரணடையச் செய்கிறார். அர்ஜுனனை நிமித்தமாக வைத்துக் கொண்டு நமக்கு வாழ்க்கையின் இரகசியங்களை விளக்கிக் கூறுகிறார்.

உலகில் நடைபெறும் சகல காரியங்களுக்கும் அவரே கர்த்தா என்பதையும், அவருக்குத் தெரியாமலோ அவருடைய அனுமதி இல்லாமலோ உலகில் எந்தக் காரியமும் நடைபெறுவதில்லை என்பதையும் தெளிவுபடுத்திக் கூறி, அவருடைய திட்டங்களில் நாம் எல்லோரும் கருவிகளாக உபயோகிக்கப்படுகிறோம் என்பதையும் விளக்குகிறார்.

கீதையின் இறுதியில் ''அர்ச்சுனா! உனது எல்லா தருமங்களையும் துறந்து, என்னையே சரணடைந்து விடு. நான் உன்னை எல்லா பாபங்களிலிருந்தும் விடுதலை செய்கிறேன் கவலையை விடு,'' என்று கூறுகிறார்.

இந்த உண்மைகளை உணர்ந்து, நாமும் செய்யும் காரியங்களின் பலனைப் பற்றி கவலைப்படாமல், ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்னும் அப்பர் வாக்கினை மனதில்கொண்டு, நமது சகல பாரங்களையும், இறைவன்மேல் போட்டுவிட்டு, அவனையே சரணடைந்து நமது கடமைகளை ஒழுங்காக நேர்மையுடன் செய்துகொண்டிருந்தால் கவலையற்றவர்களாகவும், அமைதியாகவும் வாழ்ந்து வாழ்க்கையில் வெற்றி காணலாம் என்பதே ''கீதையின் சாரம்''!



முகத்துவாரம் பிள்ளையார் கோவிலில் பள்ளிகொண்டிருக்கும் மகாவிஷ்ணுவின் அழகிய சிலை.



இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச கிருஷ்ண பக்திகழக பிரதமகுரு ஸ்ரீல. ஜயபதாக சுவாமி ஆசாரியபாதாவும் கொழும்பு புதுசெட்டித்தெரு ஸ்ரீ ராதா கோயில் தலைவர் ஸ்ரீமான் மகா கர்த்ததாஸ் அவர்களும். சுவாமி ஆசாரியபாதா அவர்கள் பிறப்பில் ஒரு கிறிஸ்தவர் என்பது குறிப் பிடத்தக்கது.



கொழும்பு இந்து இளைஞர் மன்றம் கப்பித்தாவத்த தொண்டர் வித்தியாலய மாணவ மாணவியர்களுக்கு இலவசமாக அப்பியாசப் புத்தகங்களை வழங்கும் வைபவத்தில் சமூகந்தந்திருந்த மாணவ மாணவியர்கள்.



கொழும்பு இந்து இளைஞர் மன்றம் ஸ்ரீ பால விநாயகர் ஆலயத்தில் நடாத்திய சுந்தர மூர்த்திநாயனார் குருபூசைக்கு சமுகமளித்திருந்த சிறப்பு அதிதிகள்.



தமிழகத்திலிருந்து வருகைதந்து இலங்கையின் பல பாகங்களிலும் இன்னிசையுடன் கூடிய கதாப்பிரசங்கங்கள் நடாத்தி ஆன்மீக புத்துணர்ச்சியை ஏற்படுத்திய திருமதி சூடாமணி சடகோபன் அம்மையாருக்கு பேலியாகொட ஸ்ரீ பூபால விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற பட்டமளிப்பின்போது பிரபல தொழிலதிபர் திரு ப. தங்கராஜா பொற்கிழி வழங்கியபோது பிடிக்கப்பட்ட படம்.



கொழும்புநகர லயன்ஸ் கழகத்தினர் அண்மையில் கொள்ளுப்பிட்டி பால்காரத் தோட்டத்தில் வதியும் 125 பாடசாலை சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கினர். உதவி ஆளுநர் லயன் பயிலாவும், கழகத் தலைவர் லயன் பழனிச்சாமியும் பாடசாலை உபகரணங்களை வழங்குகிறார்கள்.



மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் முகப்புத் தோற்றம்.





ஜிந்துபிட்டி அருள்மிகு சிவசுப்ரமணிய கோயில் அறங்காவலர் சபையும் கொழும்பு இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடாத்திய நல்லூர் கந்தன் தேர்த் திருவிழாவின்போது முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் உலாவருதலும், கொழும்பு இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு தே. செந்தில்வேலவர் உரையாற்றுதலும்.



லண்டன் மெய்கண்டான் ஆதீனம் சுவாமி சிவநந்தி யின் விஷேட அழைப்பினை ஏற்று லண்டனுக்கு வருகை தந்த வித்துவான் எஸ். முத்துகந்தசாமி தேசி கரின் தேவார திருவாசக பண்ணிசை நிகழ்வின் போது.



கொழும்பு பிராந்திய தொலைக்கல்வித்துறை ஆசிரிய மாணவர்களால் நடாத்தப் பட்ட வாணிவிழா அண்மையில் கொழும்பு இராமநாதன் இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்றது படத்தில் ஆசிரிய மாணவர்களால் நடத்தப்பட்ட கலைநிகழ்ச்சியான நாடகத்தின் ஒரு கட்டத்தையும் பிரதம அதிதி திரு சோமசுந்தரம் (கல்விப்பணிப் பாளர், தமிழ்பிரிவு) சிரேஷ்ட போதனாசிரியர் திரு ஆ. சிவராசா, போதனாசிரி யர் மொஹிடீன் ஆகியோரையும் பார்வையாளர் வரிசையில் காணலாம்.

# சித்த சுத்தி

ஜகத்குரு
ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

சித்த சுத்திக்குப் பயன்படுகிற சின்னச் சின்ன விஷயங்கள் பல உண்டு. இந்தச் சின்னச் சின்ன தர்மங்களை நம்முடைய பெரியவர்கள் தலைமுறை தத்துவமாக அநுசரித்து வந்தார்கள். அவர்கள் வாழ்க்கையில் திருப்தியும் சந்தோஷமும் நிறைந்திருந்தன. அவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்று பார்த்து அதை நாம் பின்பற்றினாலே போதும், புதிதாக ஒரு கொள்கையும் வேண்டாம். நாமும் சந்தோஷமாக, திருப்தியாக இருக்கலாம்.

பெரிய அத்யாத்ம விஷயங்களில் மட்டுமில்லாமல், ஒரு சமுதாயத்தில், ஒரு குடும்பத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறைகளில்கூட நமக்கு முன் வாழ்ந்த பெரியவர்கள் அற்புதமாக வழிகாட்டியிருக்கிறார்கள். உதாரணமாக உறவு, சிநேகிதம் எல்லாம் அந்தநாளில் வெகு உயர்ந்த முறையில் காப்பாற்றப்பட்டன. ஒரு கலியாணம், அல்லது அபரகாரியம் (இறுதிச்சடங்கு) என்றால் பலர் ஒன்றுசேர்ந்து செலவு செய்து நடத்திக்கொடுப்பது என்று வைத்துக்கொண்டிருந்தார்களே, அது எவ்வளவு உயர்ந்த பண்பு?

இந்தக் காலத்தில் நடப்பதுபோல் 'டெமான்ஸ்ட்ரேஷ'னும், வெளிவேஷமும் அப்போது இல்லை. ஆனால் அந்தநாளில்தான் ஏழைகளுக்கு உண்மையாக உதவிசெய்கிற மனப்பான்மை சுபாவமாகக் காரியத்தில் அநுசரிக்கப்பட்டது. ஒரு கலியாணத்துக்குப் போகிறவர்கள் தங்களால் முடிந்ததை, ஐந்தோ பத்தோ உதவிசெய்வது என்பதால் கலியாணம் செய்பவருக்கு எத்தனையோ பாரம் குறைந்தது.

ஒரு கூட்டத்திலோ பலர் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்தாலும் போதும் கொடுக்கிறவர்களுக்குப் பெரிய சிரமம் ஏதும் இல்லை. ஆனால் வாங்குகிறவனுக்கு மொத்தத்தில் கணிசமாகக் கிடைக்கும். இப்படித்தான் ஓர் ஏழைக்குக் கஷ்டம், அவன் ஒரு கலியாணம் செய்ய வேண்டும் அல்லது அபர காரியம் செய்யவேண்டும் என்றால் மற்றவர்கள் எல்லாரும் கொஞ்சம் கொஞ்சம் உதவிசெய்து அந்தக் காரியத்தை நடத்திக் கொடுத்துவந்தார்கள். முன்னாட்களில் பந்துக்களுக்குள் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் அதிகம் இல்லை. பணக்காரனாக இருப்பவன் ஏழையான பந்துவுக்கே அதிக உதவி செய்வான். இதெல்லாம் தர்மத்தைச் சேர்ந்தது. சிரமத்தில் உள்ளவர்களுக்கு உதவிசெய்வது உதவியைப் பெறுகிறவனைவிட உதவிசெய்கிறவனின் சித்த சுத்திக்கே அதிகம் உதவும்.

ஆனால் இன்று எல்லாம் மாறிவிட்டது. பழைய கால பந்துத்துவம் பணக்காரர்களுக்கு இல்லை. ஏழையான உறவினர்களுக்கு உதவுகிற மனப்பான்மை குறைந்துவிட்டது. பழைய காலத்தில் நடந்தது உண்மையான அன்னதானம். இப்போது மனிதர்கள் தங்களைப் போன்ற பணக்காரர்களுக்காகவே பார்ட்டி-ஃபீஸ்ட்டு வைக்கிறார்கள். தேசத்தில் ஏராளமாக இப்படிப் பணமும் பண்டமும் செலவாகின்றன. இதில் தர்மத்துக்கோ, சித்த சுத்திக்கோ எதுவுமே இல்லை. இவன் காரியார்த்தமாகத்தான் ஒருத்தனைக் கூப்பிட்டு பார்ட்டியும் ஃபீஸ்ட்டும் வைக்கிறான். பார்ட்டி கொடுத்து, அதில் சாப்பிட்டவர்களை ஏமாற்றிவிட்டதாக நினைக்கிறான். பார்ட்டி சாப்பிட்டவனுக்கும் தெரியும், 'இவன் பிரியத்தின் பேரில் தனக்குச் சாப்பாடு போடவில்லை. காரியத்துக்காகத்தான் சாப்பாடு போட்டான்' என்று. ஆனால் அதை வெளியே காட்டிக்கொள்ளாமல் சந்தோஷமாகச் சாப்பிட்டுவிட்டுப் போகிறான். ஆகையால், இவன் அவனை ஏமாற்றுகிறான் என்றால் அவனோ, இவன் போட்டதைச் சாப்பிட்டுவிட்டு இவனையே ஏமாற்றிப் போகிறான். ஆகபீஃஸ்டும் டோஸ்டும் ஏமாற்றுவித்தையாகவே ஆகின்றனவேயன்றி சித்த சுத்திக்குப் பயன்படவில்லை.

ஏழைக்கு அன்னதானமோ பொருள் உதவியோ செய்யும்போது இரண்டு பக்கத்திலும் உண்மையான சந்தோஷமும் பிரியமுமே நிரம்பியிருந்தன. இப்போது பார்ட்டி நடத்தும்போது அங்கே உண்மையான பிரியம் இல்லாததோடு, துவேஷம் வேறு உண்டாகிறது. வசதியிருப்பவர்களுக்கு வெறுப்பும் துவேஷமும் உண்டாகின்றன. உறவு முறைகளில் ஏழை பணக்காரர் என்று வித்தியாசம் பாராட்டக்கூடாது என்பதற்காக இவ்வளவு சொன்னேன்.

'வசதியுள்ளவர்கள்தான் பண உதவி செய்து புண்ணியம் சம்பாதிக்க முடியும்; நாம் என்ன செய்யலாம்?' என்று மற்றவர்கள் எண்ணக் கூடாது. சரீரத்தல் மற்றவர்களுக்குக் கைங்கரியம் செய்வது பெரிய புண்ணியம். அது சித்த சுத்திக்கு ரொம்ப ரொம்ப உதவும்; வசதியே இல்லாதவர்களும் இவ்விதத்தில் பிறருக்கு சரீர சகாயம் செய்யமுடியும்.

ஒவ்வொருத்தரும்—பிறருக்குக்கூடத் தெரிய வேண்டாம்—ஏதோ ஓர் ஒற்றையடிப் பாதைக்குப் போய் அங்கே உள்ள முள்ளை, கண்ணாடியை அப்புறப்படுத்தி வந்தால் போதும். அது சித்த சுத்திக்குப் பெரிய உதவி. இது மாதிரிச் சின்ன தர்மங்களை எவரும் செய்யலாம். பணக்காரர், ஏழை என்ற வித்தியாசமில்லாமல் ஒரு பேட்டையில் உள்ள அனைவரும் சேர்ந்து குளம் வெட்டலாம்.

'ஈசுவர அநுக்கிரகம் வேண்டும் வேண்டும்' என்றால் அது எப்படி வரும்? பரோபகாரமான, ஜீவ காருண்யமுள்ள நல்ல காரியங்களைச் செய்து செய்து மனசு பக்குவப்பட்டால்தான் சித்த சுத்தி உண்டாகி, அந்த சுத்தமான சித்தத்தில் ஈசுவரனின் உருவத்தைப் பார்க்க முடியும். கலங்கின ஜலத்தில் பிம்பம் தெரியாததுபோல், நாம் மனசைக் கலக்கிக்கொண்டு ஈசுவரஸ்வரூபம் தெரியாதபடி செய்துகொண்டிருக்கிறோம். பகவத் பக்தியோடு பரோபகாரமும் செய்து, மனசு தெளிவாகும்போது ஈசுவரஸ்வரூபத்தை நாம் கிரகித்துக்கொண்டு, அவனுடைய அநுக்கிரஹத்தைப் பெற முடியும்.

நன்றி: 'தெய்வத்தின் குரல்' பாகம் 1

# அகோபிலம் ஜீயர் சுவாமிகளின் அற்புதத் தொண்டு

அதிபர் சிவா பாஸ்கரராவ்

காதலால் தெற்கு நோக்கி,
வடக்கு நீல முதுகைக் காட்டி
மாதவன் விழித்துத் தூங்கும்
மாண்புயர் திருவரங்கம்!

சைவர்களால் "கோயில்" எனச் சிறப்பிக்கப்படுவது சிதம்பரம். அவ்வாறே வைணவர்களால் "கோயில்" எனச் சிறப்பிக்கப்படுவது திருவரங்கம். திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் வீற்றிருந்து அருள் சுரந்து கொண்டிருக்கும் திருக்கோயில். இது "பூலோக வைகுண்டம்" எனவும், "பெரிய கோயில்" என்றும் பெருமை வாய்ந்ததும் ஆழ்வார்களாலும், ஆச்சாரியார்களாலும் மங்களாசாஸனம் செய்யப்பட்ட இக்கோயிலின் இராஜகோபுரம் உலகிலேயே உயரமான ஆலய கோபுரமாக 235 அடி உயரத்திற்கு விண் முட்ட எழுப்பப் பெற்றிருக்கிறது என்றால் இதன் பெருமைக்கெல்லாம் காரணமாகத் திகழ்ந்த சான்றோர். வணக்கத்துக்குரிய ஸ்ரீமத் பரமஹம்ஸ அகோபில மட ஜீயர் சுவாமிகள் ஆவார்கள்.

அவர்கள் 90 வயது நிறையப்பெற்ற அருளாளர்; அகோபில மடத்தின் ஜீயர் பொறுப்பினை ஏற்று சுமார் 28 ஆண்டுகள் நிறைகின்றன. தம்முடைய பதவிக்காலத்தில் மாமன்னர்களாலும் கூடச் சாதிக்க முடியாத மாபெரும் சாதனையை நிறைவேற்றியிருக்கின்ற அவர் தம் பெருமையைப் போற்றிக் கூறுதல் எளிதன்று.

திருவரங்க ஆலயம் இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே சிறந்து விளங்கிய தொன்மையை

"ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறற்
பாயற் பள்ளிப் பலர் தொழுதேத்த
விரிதிரை காவிரி வியன் பெருந் துவத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணம்"

என்று சிலப்பதிகாரம் குறிப்பிட்டிருக்கக் காண்கிறோம்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் இவ்வாலயத்தின் நான்காம் மதிலைக் கட்டிய காரணத்தினால், "திருவாலி நாடன் மதில்" என்றே அம்மதில் அழைக்கப்படுவதைக் காண்கிறோம்.

அவருக்குப் பின்னால் இராஜமகேந்திர சோழன் சடாவர்ம சுந்தரபாண்டியன் முதலான மன்னர்களெல்லாம் கூட இவ்வாலயத் திருப்பணியில் பங்கு கொண்டு பணியாற்றியுள்ளனர். இவ்வாலயம் 14-ம் நூற்றாண்டில் பிறமத மன்னர்களால் தாக்கப்பட்டு நலிந்து காணப்பட்டபோது ஹொய்சள மன்னர்களும், விஜய நகர மன்னர்களும் மீண்டும் இவ்வாலயத்தைப் பேரார்வத்தோடு புதுப்பித்துத் திருப்பணிகள் செய்துள்ளனர்.

நாயக்கரும், விஜயரங்க சொக்கநாத நாயக்கரும், இத்திருவரங்க ஆலயத் திருப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர். 21 கோபுரங்களோடும் ஏழு பிரகாரங்களோடும், சுமார் 160 ஏக்கர் பரப்பளவில் அரங்கமாநகரில் அமைந்துள்ள இவ்வாலயத்திற்கு இராஜகோபுரம் ஒன்றை மிக உயர்ந்த கோபுரமாகக் கட்டி முடிக்கத் திட்டமிட்டு அதற்கு அஸ்திவாரமும் அக்காலத்தில் அமைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய ஆட்சி தமிழகத்தில் நீடித்திருக்க முடியாது அயலவர் படையெடுப்புக்கள் நிகழ்ந்துவிட்டபடியால், திருவரங்க இராஜகோபுரத் திருப்பணியையும் அஸ்திவாரம் அமைக்கப்பட்டு கல்கார அளவோடு நிறுத்திவிட்டிருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட 400 ஆண்டு காலங்களாக மொட்டைக் கோபுரமாக நின்ற இராஜகோபுரத் திருப்பணியை நிறைவேற்றிட யாருமே முயலாத, முன்வராத நிலையில்தான், ஒருமுறை, வணக்கத்திற்குரிய காஞ்சிமாமுனிவர் அவர்கள், திருவரங்க இராஜகோபுரத் திருப்பணி நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற தம் விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

காஞ்சிப் பெரியவர்களின் விருப்பத்தைச் செயலாக்க முன்வந்த சான்றோர்தான் வணக்கத்திற்குரிய அகோபில மடம் ஜீயர் சுவாமிகள், இத்திருப்பணியைச் செய்துமுடிக்க ஜீயர் சுவாமிகள் முன்வந்தபோது அவருக்கு வயது எண்பதுக்கும் மேல் ஆகியிருந்தது.

1979ம் ஆண்டு வைகாசி மாதம் 20-ம் திகதி முதன்முதலில் ஜீயர் சுவாமிகள் இப்பணியைத்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## அகோபிலம்

(முன்பக்கத் தொடர்ச்சி)

தொடங்கி, கடந்த எட்டு ஆண்டு காலமாக ஸ்ரீரங்க நாதன் சந்நிதியில் ராஜகோபுரம் இல்லாத குறையைப் போக்கத் தமது தள்ளாத வயோதிகத்திலும் தம் திருமேனியையும் கவனியாமல் தாமே முன்னின்று தமது திரவியத்தாலும் தமது சிஷ்யர்களின் திரவியத்தினாலும், மற்றும் ஆண்டவன் சுவாமிகள், காஞ்சி சங்கராச்சாரியார் முதலான பெரியோர்களின் சகாயத்தையும், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடக ராஜ்யங்களின் அரசாங்க சகாயத்தாலும் இந்த முனிச்வரர், ''பட்டுவித்தே திருவேன் அரங்கனின் அழகிய கோபுரத்தை'' என்று கங்கணம் கட்டிக் கொண்டு அவ்வாறே அல்லும் பகலும் உழைத்து முடித்திருப்பது வார்த்தைகளால் பாராட்ட முடியாத ஒரு மாபெரும் வரலாறாகும்.

இப்புனிதத் திருப்பணியை அகோபிலமடம் ஜீயர் சுவாமிகள் எடுத்துக்கொண்டபொழுது அவருக்கு ஏற்பட்ட தடைகளும் மிகப்பலவாகும். வடகலை, தென்கலை பிரச்சினையைப் பலர் எழுப்பினார்கள். தொல்பொருள் ஆய்வுத்துறையினரோ பழமையின் சின்னமாக விளங்கும் மொட்டைக் கோபுரத்தைக் காப்பாற்றுவதிலே உறுதிகாட்டி, வழக்காடவும் முற்பட்டனர். தடைகள் எத்தனை வந்தபோதும் அவையனைத்தையும் அரங்கனின் திருவடிகளுக்கு ஒப்படைத்து திருப்பணிகளில் கவனம் செலுத்தி முன்நின்றார்.

திருவரங்க இராஜகோபுரத் திருப்பணிக்குப் பல மதத்தவரும், பல இனத்தவரும், பல்வேறுவகைப்பட்ட தொழில் செய்வோரும், செல்வர்களும் வறியவர்களும் கூடத் தங்கள் பங்கான நன்கொடைகளை இயன்ற அளவு வழங்கியிருக்கின்றனர். ஆகவே, இந்திய தேசத்தின் ஒருமைப்பாட்டுச் சின்னமாக உலகிலேயே உயர்ந்த இந்த இராஜகோபுரம் 235 அடி உயரத்திற்கு எழுந்தருளியிருக்கிறது. சுமார் ஒன்றரை கோடி ரூபாய் செலவாகியுள்ளது.

இந்தச் செயற்கரும் பணியைச் செய்து முடித்திருக்கின்றவர்கள், (அண்மையில் அரங்க நாதனின் திருவடிநிழலை அடைந்த) வணக்கத்திற்குரிய அகோபிலமட ஜீயர் சுவாமிகள் 90 வயதிலும் அவர் இந்த இராஜகோபுரத்தின் 13 நிலைகளிலும் ஏறி ஏறித் திருப்பணியை நிறைவேற்ற பணியாளர்களை ஊக்கப்படுத்தி, திருமங்கையாழ்வாரே வந்து மறுபடியும் திருப்பணியைச் செய்கிறாரோ, ஸ்ரீ இராமானுஜரே மறுபடியும் திருப்பணியைச் செய்கிறாரோ என அகில பாரத மக்கள் வியந்து போற்ற, இந்தத் திருப்பணியைச் செய்து முடித்திருப்பதை எண்ணும்போது, இத்தகைய ஒரு மகானைத் தமிழகம் மட்டுமல்ல அகில உலகமே பெற்றிருந்தது. எவராலும் வியக்காமல் இருக்கமுடியவில்லை. ஜீயர் சுவாமிகளைப் போல ஒரு மகான் செயல் வீரராகக் கிடைத்திருக்காதிருந்தால் இன்னும் மொட்டைக் கோபுரமாகவே இருந்திருக்கும்.

ஜீயர் சுவாமிகளின் தொண்டுகள் சொல்லிலடங்கா. சமய வரலாற்றில் அவருடைய பாரிய தொண்டுகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய அற்புதச் சாதனையாகும். பாரதம் மட்டுமன்றி அகில உலகமே அவரின் அற்தம் திருத்தொண்டை போற்றிப் புகழும்வண்ணம் அகிலம் காக்கும் அரங்கநாதனே கோபுரமாக எழுந்து அவரின் திருத்தொண்டிற்கு சான்றாக உள்ளான்.

இந்த அற்புதச் சாதனையைப் புரிந்த மகான் அகோபில மடம் ஜீயர் சுவாமிகள் அரங்கன் அடியில் நிலைத்த பேரின்பத்தைப் பெற்றிருக்க எல்லாம் வல்ல எம்பெருமானை நோக்கிப் பிரார்த்திப்போமாக.

அன்பினால் அரங்கு னானை
 ஆண்டநல் ஆண்டாள் சுத்த
இன்ப நற் றமிழும் ஆழ்வார்
 இசைத்த நற் றமிழும் ஓங்கும்
பொன்னொளிர் ஸ்ரீரங் கத்தில்
 புவி புகழ் கோபுரத்தை
மன்பதை உய்யக்கண்ட
 மாமணி போற்றி போற்றி

## வளர்த்துவிட்ட தேகம் இங்கே வாடுதம்மா!

உனையன்றி ஒரு சொந்தம் ஒருபோதும்
 நில்லாதம்மா
உருவாகும் உறவெல்லாம் பகல் காணும் கனவேயம்மா
கருவான வன் ஜீவன் தனைப்பாரம்மா
உனைகாணாது தொழுதேனே வருவாயம்மா

உருக்கமுடன் எனக்கு உணவூட்டினாய்
நான் உய்வதற்கோர் கல்வி தனைக்காட்டினாய்
வருத்தமுடன் நீ சேர்த்த உதிரமெல்லாம்
வாட்டியதோ உந்தன் வரவுகாரை

நான் தூங்கப்பாய் போட்டு நீ விழித்தாய்
தேன் பொங்கும் தாலாட்டு நீ படித்தாய்
வளர்த்து விட்ட தேகம் இங்கே வாடுதம்மா
வாழ வைத்த தெய்வம் எங்கோ மறைந்ததம்மா

– தர்மபிராசா ஜெயஹரன்

# மூலத் தமிழ் (திருமூலர் தமிழ்)

பண்டிதர் இணுவையூர் கா. செ. நடராசா B.A.(Hons)

ஓம் என்ற பிரணவ ஒலியே பிரபஞ்சத் தோற்றத்திற்கும் அதன் விரிவுக்கும் மூலமாய் அமைந்துள்ளதென்பது இந்து தத்துவக் கோட்பாடு. ஒலியின் அடிப்படையிலே உலகியல் வாழ்வு நிலைப்பட்டுள்ளது. ஒலிப்பின்றி உலகியல் வாழ்வு இல்லை. பிரபஞ்சத் தோற்றத்திற்கு அண்ட வெடிப் பொலியே மூலம் என்பர். அண்டத்தில் உள்ளதே பிண்டமாகிய அணுவிலும் அமைந்துள்ளது. அண்டவெடிப் பொலி பிரபஞ்ச தோற்றத்திற்கு மூலமாக அமைந்தது போன்று பிரபஞ்ச இயக்கத்திற்கு அணுவின் வெடிப் பொலி மூலமாகும்.

ஒலி கேட்கும் ஒலி கேளா ஒலி என இருவகைப்படும். கேட்கும ஒலி நாதமெனப்படும். கேளா ஒலி அநாகதம் எனப்படும். இக் கேளா ஒலி பேரொலி அணுவொலி என இருவகைத்தது. இவ்வொலியே உயிர்க்குலத் தோற்றத்திற்கும் அண்டங்களின் விரிவிற்கும் மூலமாகும். ஒலி திண்மையுறும் பொழுது ஒளியாகி விந்தாகிறது. அதனால் அவை நாதம் என்றும் விந்தென்றும் பகரப்படுகின்றன.

இந்து தத்துவம்; மூல ஒலிக்கு முதன்மை கொடுக்கின்றது. அதனால் அம்மூல ஒலியின் உட்பொருட் தன்மைக்கு ஆய்வின் வழிநின்று முடிவு கூறுகின்ற மூலர் தமிழ்; இத்தத்துவ முடிவு ஆழ்ந்த சிந்தனையை உள்முகமாகத் திருப்பி அதனை உலகியல் வாழ்வோடு இணைவு பெறச் செய்கின்றது. அனுபவ வெளிப்பாடாக அது அமைவுறுகிறது.

காற்றில் எழும் ஓசையும் உள்ளத்தில் எழும் ஓசையும் பிரபஞ்ச விரிவுக்கும் ஆத்ம விரிவுக்கும் அடிப்படையாக அமைகின்றன. தமிழின் மூல ஒலியாக 'அ' கரமும் சிறப்பொலிகளாக 'இ' கர 'உ' கரங்களும் அமைந்துள்ளன. இம்மூன்றில் அ என்பது 'அது' என்ற பிரமத்தையும் இ என்பது 'இது' என்ற ஆன்மாவையும் உ என்பது 'உது' என்ற பிரபஞ்சத்தையும் குறிக்கும். அ என்ற அதுவே இ என்ற ஆன்மத்தோற்றத்திற்கும் உ என்ற பிரபஞ்சத்தோற்றத்திற்கும் வித்தாகும். அ. இ. உ. என்ற மூன்றைச் சேர்த்து உச்சரிக்கும் பொழுது உச்சரிப்பவரை அறியாமலே மகர ஓசை வெளிப்படுகின்றது. அஇஉம் என நின்று விரிவாக்கம் பெறும்பொழுது ஓ உம் என்ற தொனிப் பொருளாய் அமைவு பெறக் காண்கின்றோம். இதனைத் திருமூலர் மகரத்திறுதியாய் மாய்ந்து மாய்ந்து ஏறி என் பகர்வர். இவ்வண்ணம் நிற்கும்போது இகர உயிரின் ஓசை அதில் கரைந்து விடுகின்றது இது அத்துவிதம்.

ஓசையின் மூலம் சடப்பொருள்களை இயக்கவும் அதாவது உயிரில் பொருளை இயக்கவும்; ஓரறிவு உயிரில் இருந்து பகுத்தறிவுடைய ஐம்புல ஆட்சி கொண்ட மனிதர் வரை இயக்கவும், ஆற்றலை வளர்ச்சி பெறவும் செய்யலாம் என நவீன அறிவியல் துறை நிறுவியுள்ளது. ஓசை என்பது இயற்கையின் செயற்பாட்டால் வெளிவரும் கூறு எனக் கொள்ளாது ஓசையின் செயற்பாடே இயற்கையின் வெளிப்பாடென இந்து தத்துவம் நவிலும் அதனைத் திருமூலர்;

ஓங்காரத்துள்ளே உதித்த ஐம்பூதங்கள்
ஓங்காரத்துள்ளே உதித்த சராசரம்
ஓங்காரதீதத் துயிர் மூன்றும் உற்றன
ஓங்கார சிவ பரசிவ ரூபமே.

எனத் தனது தமிழ் மூலம் உரைக்கின்றார். இங்கே ''ஓங்காரதீதத்துயிர் மூன்றும் உற்றன'' என்ற அடியினை உற்று நோக்குதல் பொருத்தப்பாடு உடையதாகும். அ. இ. உ. என்பனவே அந்த மூன்று உயிரும். இந்த அ. இ. உம்தான் ஓஉம் என விரிவு பெறுகின்றன. இவை இன்றி அண்டத்தின் விரிவாக்கம் இல்லை.

அது என்ற பேராற்றலான பிரமமும், அப்பிரமத்தின் இயக்க விளைவால் ஏற்படும் எதிர் விளைவாகத் தோன்றிய இது என்ற ஆன்மாவும், உது என்ற பிரபஞ்சமும் இணைவு பெறும் பொழுது, வான், காற்று, தீ, நீர், நிலம் என்பன தோற்றம் பெறுகின்றன இதன் மூலம் அண்ட சராசரங்களின் தோற்றம் விரிவடைகிறது. ஒன்று மூன்றாகி — ஐந்தாகி — பத்தாகி மலர்ச்சி பெறுகின்றன. அதனால் இவ்வுலகு மலர்தலை உலகு என நவிலப்படுகின்றது. இவை அனைத்தும் ''ஓங்கார ரூப பரசிவ ரூபமே'' என்ற ஒன்றாம் தன்மை உடையன எனத் திருமூலர் தமிழ் விளக்கம் செய்கின்றது.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## மூலத் தமிழ்

(முன்பக்கத் தொடர்ச்சி)

அதாவது அ. இ. உம் என மூன்றாகி அவை ன்பி எ. ஒ. என்பவற்றுடன் இணைந்து அ. இ. உ. எ. ஒ ஐந்தாகி அவையே நீட்டல் ஓசை பெற்று ஆ. ஈ. ஊ. ஏ. ஓ. என விரிந்து பத்தாகி (அ. ஆ. இ. ஈ. உ. ஊ. எ. ஏ. ஒ. ஓ) என நின்றன. இவை மீண்டும் அ என்ற ஒன்றில் தன்மயப்படுகின்றன. ஐ, ஔ என்பவை அ இலும் அ உவிலும் அடக்கம் பெற்றதனால் அவை எண்ணப்படவில்லை.
ஒன்று 'அ' மூன்று 'அ' 'இ' 'உ' ஐந்து 'அ' 'இ' 'உ' 'எ' 'ஒ' பத்து 'அ' 'இ' 'உ' 'எ' 'ஒ' 'ஆ' 'ஈ' 'ஊ' 'ஏ' 'ஓ.
இதனை,

> ஐம்பத்து ஏழுத்தே அனைத்து வேதங்களும்
> (ஐம்பதெழுத்தே)*
> ஐம் பத்து எழுத்தே* அனைத்து ஆகமங்களும்
> ஐம் பத்து எழுத்தின்* அடைவை அறிந்தபின்
> ஐம் பத்து எழுத்தே* அஞ்செழுத்தாமே.

என்ற பாடல் அடிகள் மூலம் தெளிவு படுத்தப்படுகின்றது. 5ம் 10ம் ஆக நின்ற அ என்ற எழுத்தின் இயல்பை அறிந்தபின்தான் ஐந்தெழுத்து மந்திரப் பொருளை உணரலாம் 'எழுத்தெல்லாம் அகரமுதல' (அகரமுதல எழுத்தெல்லாம்) என்ற வள்ளுவர் கூற்று மூலத் தமிழை உறுதி செய்கின்றது.

உரையாசிரியர்கள் — மூலத் தமிழை விளக்குஞ் செய்வோர்கள்; (50) எழுத்தெனக் கொள்வார். ஆயின் அனுபவ நிலையில் ஆய்வு நோக்கில் ஒன்று மூன்றாக அது ஐந்தாகிப்; பத்தாய் விரிவுபட்டதே தமிழ் என மூலர் தமிழ் கூறும். அதனைத் திருமூலர் வாய்வழிவந்த மந்திரத் தமிழ் மூலங் காண்கின்றோம்.

> அகர முதலாக ஐம் பத்து ஒன்றாகி
> (அகரமுதலா ஐம்பத்தொன்றாகி)
> உகர முதலா ஓங்கி உதித்து
> (ஒ. உ)
> மகர இறுவாய் மரய்ந்து மாய்த்துதேறி
> (ஒ. உம்)
> நகர முதலாம் நந்தி தன் நாமமே:

நமசிவாய — ந் + அ = ந
ம் + அ = ம
ச் + இ = சி
வ் + ஆ = வா
ய் + அ = ய

நகர மகாரங்களால் நாதம் தோன்றுகின்றது. இகர உயிர் இது என்ற உயிர் விளக்கமாக நிற்கிறது வ் என்ற வகர மெய்யால் உகர உயிரின் ஒலிப்பு; பிரபஞ்சத்தினையும் ச் என்ற சுகர மெய் அதன் விரிவையும் உணர்த்துகின்றன. இம்மந்திரத்தில் அகரத்தின் இயல்பும் நாதத்தின் இயல்பும் விளங்கி நிற்பதால் இது மூல மந்திரம் எனப்பட்டது.

இம் மந்திரங்கள் அனைத்தும் ஒன்றாகி நின்று மூன்றாய் முகிழ்ந்து ஐந்தாய் விரிந்து பத்தாய் மலர்ந்து ஒன்றாய் மணம் பரப்புகின்றன. இதனை அகரமுதலாய் ஐம்பத்தொன்றாகி எனக் குறிப்பர். அதாவது அகரம் முதலாகி ஐந்து - பத்து பின் அனைத்தும் ஒன்றாகி எனப் பொருள் கொள்வதே பொருந்துதம்.

பிரணவ ஒலியானது பல்வகை ஒலிபேதங்களுக்கும் வித்தாகிப் பிரபஞ்ச விரிவாக்கத்திற்கு மூலமுதலாக அமைந்துள்ளது. இது ஆய்வு நிலைக்கு எட்டாதது. அனுபவத்தால் உணர்வது. இதனை மூலர் தமிழ் ''தாய்தன் மணாளனோடு கூடிய இன்பத்தை மகட்கெடுத்துரைப்பாளோ'' எனப்பகரும்.

நாதந்தான் அனைத்தும் என்ற நிலைப்பாட்டில் திருமூலர் தமிழ் மிகத் தெளிவுடன் நிற்கிறது. நாதம் இன்றி நலம் ஒன்றும் இல்லை. நாதரூபமான தத்துவம் பொருளை அனுபவித்துத்தான் உணரலாம். அது காட்சிப் பொருளன்று கையால் தொட்டறியக் கூடியதன்று. உணர்வாய் அழைந்து மகிழ்வது, இன்புறுவது, பேரானந்தப்படுவது. அந்த அனுபவத்தைச் சொல்லால் விளக்க இயலாது. அது இப்படித்தான் என்று உணர்ந்தவர்கள் பேச்சற்று மூச்சற்றுத் தன்னில் தான் அடங்கி விடுவர். விண்டுரைப்பவர்கள் சொற்சிலம்பம் ஆடுபவர்களாவே இருப்பர்.

அண்டம் அனைத்தும் இயற்கைச் செயற்பாட்டிற்கு உட்பட்டே இயல்கின்றன. இவ்வியல்பு நெறி யாரால்? எப்பொழுது? எங்கே? ஏற்பட்டது எனச் சடப் பொருள் ஆய்வின் மூலம் கூறுதல் இயலாது. உள்ளத்துள்ளே உட்புகுந்து ஆன்ம நிலையைத் தெளிவுறக் கண்ட அனுபூதிமான்களே அதனைத் தம் வாழ்வின் எச்சங்கள் மூலம் விளக்கி நிற்கின்றனர். அதில் ஒன்றுதான் திருமூலர் தந்த தமிழ்.

நாதவடிவான வேதங்கள் ஆடுகின்றன: அந்த வேதப் பொருளை விளக்க எழுத அனுபவ மொழிகளான ஆகமங்களும் ஆடுகின்றன. நாதத்தில் முகிழ்ந்து இன்புறுத்தும் கீதங்களான இசைகளும் ஆடுகின்றன. பிரபஞ்ச விரிவாய் நின்றிலங்கும் அண்ட கோளங்களும் சுழல்கின்றன — ஆடுகின்றன. ஐம்பூதங்களான நீர், நிலம், தீகால், வான் அனைத்தும் ஆடுகின்றன. அனைத்துமே இயக்கச் செயற்பாட்டுக்குட்பட்டு ஆடிக்கொண்டே இருக்கின்றன இவை அனைத்திற்கும் அடிப்படையாக, அமைந்தது நாத ஓசையே. அந்த நாத ஓசை ஓங்காரமாய் கிண்கிணி ஒலிபரப்பி இன்புறுத்துகின்றது. இனி மூலத் தமிழில் அதனைக் காண்போம்.

(மிகுதி அடுத்த இதழில்)

# இந்து கலாசார அமைச்சின் சேவை ஏழை - எளிய மக்களைச் சென்றடையவேண்டும்

— து. வீ. திருப்பதி —

இரத்தினங்களின் இருப்பிடமான இரத்தினபுரியில், ஹப்புகஸ்தன்னை—டேனாகந்தை தோட்டத்தில்; களனி கங்கையின் தோற்றுவாயின் ஆற்றங்கரையில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த ஆவணித் திங்கள் 31-09-92ல் வெகு விமரிசையாக அப்பகுதி வாழ் மக்களால் கொண்டாடப்பட்டது.

ஏறத்தாழ நாற்பதாண்டுகளின் மூன் ஆற்றில் கண்டெடுக்கப்பட்ட விநாயகப் பெருமானின் உருவச் சிலையை அப்பகுதி மக்கள் மேடை கட்டி அமைத்து பக்தி பரவசத்துடன் வழிபட்டுவரத் தொடங்கினர்.

வெறும் மேடையில் வீற்றிருந்த எம்பெருமானுக்குக் கோயில் கட்டி, கும்பம் வைத்து, கோயிலுடன் மண்டபமும் கட்டி, மண்டபத்தை அழகுற சுத்தமாக, பராமரித்து பொலிவு கூட்டியுள்ளனர் இப்பகுதி உழைக்கும் மக்கள். இதற்காக அவர்கள், கடந்த நாற்பதாண்டுகாலம் சிறான — தீர்க்கமான உழைப்பையும்—முயற்சியையும் செலவிட்டு வந்துள்ளனர்.

உழைக்கும் மக்களின் சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட இப்படியான ஓர் ஆலயத்தையும், ஆலயத்தை உள்ளடக்கிய இந்து மக்களின் வளர்ச்சியையும், இற்றைவரை இந்து அமைச்சு இனம் கண்டுகொள்ளாவிட்டாலும் இனியாவது அதன் திருத்தொண்டுப் பார்வையை அந்த ஆலயத்தின் மீது பதிப்பது சாலச் சிறந்ததொரு திருத்தொண்டாகும்.

இளமும் வாழ்க்கையின் பாட்டுக்கே வாடி — உழைத்துவரும், உழைக்கும் மக்களை மட்டுமே மையமாகக் கொண்ட இவ்வாலயத்திற்கு இம்மக்கள் தம் உழைப்பின் ஒரு பகுதியை மனமுவந்து அளித்து ஆண்டுதோறும் ஆவணித் திங்களில் கொண்டாடும் திருவிழாவில் ஆடம்பரம் ஏதுமில்லை. அங்கு உழைக்கும் மக்களின் உண்மையான பக்தியை மட்டுமே காணமுடிகிறது.

இவ்வாண்டு இந்த ஆலயத்தின் உற்சவத்திற்காக—கொழும்பு வாழ் வர்த்தகப் பெருமக்கள் S. விநாயகமூர்த்தி, S. முத்துக்குமார் மூலமாக வழங்கிய நிதி உதவியிலிருந்து, சமையல் பாத்திரங்கள் வழங்கி, அன்னதானத்திற்கும்—அப்பகுதி மக்களின் திருமண தேவைகளுக்காகவும் சேவை செய்துள்ளது பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

போக்குவரத்துகளின் வசதிகளற்ற கடைக்கோடி தோட்டமான டேனாகந்தை அதன் சுற்றுப்புறத் தோட்ட மக்களாலும் பக்திபரவசத்துடன் கொண்டாடப்படுகிற இத்திருவிழா இந்துக்களின் பாரம்பரிய தொண்டான அன்னதானத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, வேல்காவடி, பன்னீர்காவடி, பறவைக் காவடி, தீ மிதியலோடு மலையகத்துக்கே உரிய கலைக் கலாசார நாட்டியமான கரக—காவடி ஆட்டங்கள் சகிதம் கடந்த ஆவணித் திங்களில் மூன்று நாட்களாக மிகச் சிறும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது.

''ஆலயந்தோறும் அறநெறிப் பாடசாலைகள்'' என்ற அரும் பெரும் பணியோடு தம் பணியை முன்னெடுக்கும், இந்து கலாசார அமைச்சு இவ்வாலயத்தின் வளர்ச்சிக்காகவும் அங்கு வளரும் எதிர்கால சமுதாயத்தினரின் சமய அறிவு — முறையான வழிபாட்டு வளர்ச்சிக்காகவும், தம் பங்களிப்பைச் செய்ய வேண்டிய அவசியமான காலக்கட்டத்தில் உள்ளனர் என்பதை இவ்வரிய சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இக்கோயிலின் சமீபமாக மோசமான கட்டடமொன்றில் டேனாகந்தை தமிழ் வித்தியாலயம் அமைந்துள்ளது. இங்கு நான்கு ஆசிரியர்களை உள்ளடக்கி, ஏறத்தாழ இருநூறுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் கல்வி பயிலுகின்றனர். இந்து சமய அடிப்படை அறிவையும், வழிபாட்டு முறைகளையும், இப்பிள்ளைகளுக்கு இந்து சமய முறைப்படி ஊட்டுவதன் மூலமும் ஆசிரியர்களின் தொண்டு மனப்பான்மையான சேவையையும் பயன்படுத்தி இச்சீரிய தொண்டை முன்னெடுக்க வழிவகை உள்ளது.

இரண்டாவதாக, இந்துக்களுக்கென மன்றத்தையும் இங்கு தோற்றுவிக்கலாம். இத்தோட்ட வளர்ச்சியில் தன் வாழ்நாளைச் செலவிட்டவரும், ஆலயத்தின் அறங்காவலருமான திரு. கந்தசாமி கணக்கப்பிள்ளை அவர்களின் சேவையையும் நன்கு பயன்படுத்த முடியும். கட்சி சார்பற்ற முறையில் இந்து மன்ற அங்கத்தவர்களை தெரிவு செய்து அந்தத் தெரிவில், சேவையில் ஈடுபடும் ஆசிரியர்களையும் உள்ளடக்கும்போது இந்து மன்றத்திற்கு தங்களின் நற்பணியை தொடர்வது எளிதாக முடிவதோடு — சிறந்த இப்பணியை தொய்வில்லாமல் தொடரவும் வழி பிறக்கும்.

இருண்ட வீடுகளில் படிப்பறிவைத் தொடர முடியாத ஏழை-எளிய மாணவர்கள், தங்கள் வாசிப்புத் திறனையும், சமயக் கல்வி வளர்ச்சியை மேம்படுத்திக் கொள்வதற்கும், உழைக்கும் மக்களின் முறையான வழிபாட்டு முறைகளை நெறிப்படுத்துதற்கும், மனச் சஞ்சலங்களையும் துன்பத்தையும் இறக்கிவைக்கக்கூடிய இடமான இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்காக இந்து கலாசார அமைச்சு, ஏடு தொடங்கும் நவராத்திரி மாதமான இம்மாதத்திலேயே வளர்ச்சிப் பணியை முன்னெடுக்க இப்பகுதி மணின் சார்பாக கோரிக்கையாக சமர்ப்பிக்கிறேன்.

# முப்பெரும் தேவிகள்

தமிழ்மணி
குறிஞ்சி தென்னவன்



## மலைமகள்

வெற்றித் திருமகளே — நெஞ்சில்
வீரந் தருபவளே !
சுற்றி வரும்பகை தூள் தூளாக்கியே
முற்றும் அழித்திடும் மோகன ரூபியே,

கற்றைக் குழலுமையே, — நீல
கண்டன் உயிர்த்துணையே !
செற்றலர் மூவெயில் பற்றி யெறித்திடும்
செஞ்சடை யோன்விழிச் சுடர்க் கனலாகிய
— வெற்

தாயின் கருவினுக்கும் உயிர்ச்
சக்தி யளிப்பவளே
தீயின் சுடரென தோன்றும் விழியுடன்
தீமையைக் காய்ந்திடும் — பார்மகளேயுமை
— வெற்

மோனத் தவமியற்றும், — முனிவர்
மூச்சில் உறைபவளே
தேன்தமி ழிசையுடன் பாடல் பொழிந்திட
'ஞானக்' குழந்தைக்கு பாலினை யூட்டிய

சத்தியென் றேயுரைப்பார், — மனச
சஞ்சலம் தீர்ப்பவளே
எத்திசை யிலுமுன் சக்தியிலாவிடில்
இவ்வுல குயிர்களின் இயக்கமும், இலையடி !

## அலைமகள்

செங்கமலம் மீதுறையும் தேவி புவிச்
செல்வமெல் லாமருளும் திருவே !

அங்கமெல்லாம் பொன்னுதிரும்
ஆனந்த மயிலே
தங்கமணி மார்பன் திருத்
தோளணையும் உயிரே — செங்

வாக்கிலும் மனத்திலும்
மதியிலும் குணத்திலும்
நோக்கிலும் வளத்தினை
நிறைப்பவள் நீயே ! — செங்

ஊக்கம் உடையவர் பால்
உறைந்திடும் தாயே ; உளம்
உறத்துதிப் பார்க்கே
உதவிடும் நீயே ! — செங்

உழைப்பின் பயனாய்
விளைபவள் நீயே
உலகின் செம்மையில்
ஒளிர்பவள் நீயே ! — அறம்
பிழைத்தவர் பொருளெலாம்
போக்கிடுவாய் ! வாய்மை
பிழையார் வறுமை போக்கிடுவாய் — செங்

## கலைமகள்

கலைஞான வடிவான ராணி ! — உள்ளக்
கமலத்தி லேயமர்ந்து களிப்பூட்டும் வாணி !

நிலையான அருட் செல்வம், கல்வி, — இந்த
நிலத்திலுள் ளோர் எவர்க்கும்
தரும் ஞானச் செல்வி ! — கலைஞான

குழந்தையின் முகம் போல் மலர்ந்த தாமரையில்
குலவிடும் நின்றன் கரத்தில் நான்மறை !
செழுங்கனி இதழ் திறந்தால் செந்தேன் மழையோ:
செங்கையின் யாழ்பொழியும் கான மழையோ !
— கலைஞான

இசையும் கூத்தும் இயலும் இணைந்த
எழிலே இன்பத் தமிழே ! உயிரே !
அசையும் காற்றின் ஒலியே ! அகத்தின்
அன்பின் உணர்வே ! அமுதே ! கரும்பே !
— கலைஞான

பளிங்காய் தெளிந்த புலவர்கள் நெஞ்சின்
பைந்தமிழ்க் கவியே கவியின் பொருளே !
விலங்காம் மனஇருள் விலக்கிமெய் ஞான
விளக்கினை ஏற்றும் வித்தகி நீயே !
— கலைஞான

குயிலின் இனிமைக் குரலின் உயிராள் !
குழலின் நாதத்தில் குலவும் இசையாள் !
பயிலும் முத்தமிழ்ப் பாட்டின் சுவையாள் !
பாரதி யாள் ஞானச் சாரதி யாள்; தெய்வ
— கலைஞான

# ஹரிகதா காலட்சேபத்தில் இசை



திரு. மு. கடம்பநாதன்
(எம். ஏ. இசை)

இயல், இசை, நாடகம் இம் மூன்றும் ஒன்று சேர்ந்த கலையே ஹரிகதைக் கலையாகும். இங்கு இசையோடு இதிஹாஸ, புராண, வரலாறுகளை தக்க சான்றுகளுடன் எடுத்துக் கூறப்படும். இதை நிகழ்த்தும் வித்துவான்கள் ''கீர்த்தன்கார்'' எனப்படுவர். இந்தக் கலையை காலட்சேபம், கதாகாலட்சேபம், ஹரிகதா காலட்சேபம் என்றும் அழைப்பதுண்டு. கதாகாலட்சேபம் என்ற சொல் சமஸ்கிருத சொல்லாகும். இதன் பொருள், பொழுதுபோக்கிற்காக கதைகளை கேட்பது. இங்கு ஒரு நாடக அமைப்போ, ஒப்பனையோ இன்றி தனிப்பட்ட ஒருவரால் பலவிதமான பாத்திரங்களைப் படம் பிடித்துக் காட்டும் நிகழ்ச்சியாகும்.

காலட்சேபம் நடத்துபவர் இங்கு பாடியும், நடித்தும் நடனமாடியும் கதையை விளக்கிச் செல்வார். இவருடைய விரிவான அறிவும் இசை அனுபவமும் தமாஷாக கூறும் பாணியும் கதைகளை எடுத்துக் கூறும் திறமையும் மொழியறிவும் இந்தக் கலைக்கு வெற்றியைத் தேடித் தருவதுடன் எல்லோரும் விரும்பக் கூடியதாகவும் உள்ளது. இதுபோன்று கதைகளை காலட்சேபமாகக் கூறும் இந்தக் கலை இந்தியாவில் நகரங்களிலும் கிராமங்களிலும் இருந்து வருகின்றது. இதனுடைய சில பாணிகள் மராட்டியில் கீர்த்தனை என்றும் இந்தியில் காதகதா என்றும் குஜராத்தியில் ககரிய புராணம் என்றும் தெலுங்கில் ஹரிகதா காலட்சேபம் என்றும் தமிழில் ஹரிகதை என்றும் கன்னடத்தில் ஹரிகதே என்றும் மலையாளத்தில் கதாபிரசங்கம் என்றும் அழைக்கப்படுகின்றன. இவைகள் நிலப்பகுதியின் குணாதிசயங்களுக்கு ஏற்றவாறு பாணிகள் வித்தியாசப்படும்.

## திருமுறை பதிகம்

திருமுறை கண்ட புராணத்தில் ஒவ்வொரு பண்ணுக்கும், இத்தனை கட்டளை எனப் பாடப்பட்ட செய்யுளை தந்து விளக்கி, மேலும் ஒவ்வொரு பண்ணிலும் அமைந்த தேவாரப் பாடலை ஆராய்ந்து அதன் கட்டளையை தருகின்றார். தேவாரத்தில் வரும் பண்களுக்கான நிலைவேறுபாடுகளையும் சாதி வேறுபாடுகளையும் தருகின்றார். இங்கு வரும் பண்களுக்கான சுவையை திருமுறை என பதிக எண்ணுடன் வகைப்படுத்தி தருகின்றார். மேலும் திருவாவடுதுறை யாதீன ஏட்டுப் பிரதியின்படி தேவாரப் பண்களுக்கு வகுத்த ராகம்-ளையும், இக்காலத்து ஓதுவார்கள் பாடும் ராகம்களையும், பகற்பண், இரவுப்பண் பொதுப்பண்களையும் தருகின்றார்.

நாரதர் பாணி மகாராஷ்டிரத்தில் சிறப்புற்றதுமல்லாமல் அண்டைய மாநிலங்களுக்கும் இது காலட்சேபமாகப் பரவியது. இந்த முறை காலட்சேபம் மராட்டியர் ஆட்சியில் தஞ்சாவூரிலும் இதைச் சுற்றியிருக்கும் இடங்களிலும் பரவியது. உள்ளூரிலிருக்கும் பாகவதர்களும் இதனுடைய முக்கிய அம்சங்களை கையாண்டு வந்தார்கள்.

## தஞ்சாவூர் சம்ரதாயம்

1673ம் ஆண்டு முதல் மராட்டிய கீர்த்தனைக்காரர்கள் தஞ்சைக்கு வந்து இந்தக் கலையை பரவிடச் செய்தார்கள். இராமச்சந்திரபாவா, மொருகாம்கர் மற்றும் மேருசாமி இவர்கள் இந்தக் கலையில் சிறப்பு வாய்ந்தவர்கள் ஆவர்.

தமிழ் நாட்டில் முன்னோடியாக திகழ்ந்த காலட்சேபக்காரர்கள் வரதகோபால பாகவதர், கோபால கிருஷ்ண பாகவதர், பூவல்லியூர் கல்யாணராம பாகவதர், காவணமங்களம் சுவாமி சாஸ்திரிகள், பர்த்தையூர் கிருஷ்ண சாஸ்திரி முதலியோர் ஆவார்கள். எனினும் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவரே (1841 — 1903) தமிழ் நாட்டில் ஹரிகதா காலட்சேபக் கலைக்கு தந்தை என்று கருதப்படுகின்றார். இவர் காலத்தில் தென்னிந்தியாவில் சிறப்புற்றிருந்த மராட்டிய கீர்த்தனைகளிலிருந்து சில அம்சங்களைத் தழுவி காலட்சேபக் கலையை இணைக்கும் செயலில் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டார்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# பூரண கும்பத்தின் தத்துவ விளக்கம்

துன்னாலை ராம் தேவலோகேஸ்வரசர்மா
(ஸ்ரீபால செல்வ விநாயக மூர்த்தி கோவில்)

ஆதியும் அந்தமும் இல்லாத சமயம் எமது சைவசமயம் இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களால் கூட இந்து சமயம் எப்போது ஆரம்பமாகினது என்பதை கண்டு பிடிக்க முடியவில்லை அப்பேற்பட்ட தனிப் பெருமையாய் விளங்குகின்றது எங்கள் சமயம் என்றால் அது மிகையாகாது. எங்கள் சமயத்தில் செய்யப்படும் ஒவ்வொரு கிரியை விஷயங்களிலும் ஒவ்வொரு தத்துவ விளக்கங்கள் அழகாக சொல்லப்படுகின்றது. இந்த விஷயங்களை எல்லாம் இந்து மக்களாகிய நாம் அறிந்திருக்க வேண்டியது மிக அவசியமாகும்

எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்துமதத்தை பற்றி அறியாதவர்கள் இருக்க மாட்டார்கள். ஏனெனில் நல்லதொரு கருத்துடன் எவரும் விருப்பிப்படிக்கக்கூடியதாய், ராமாயணமும், மஹாபாரதமும், பகவத்கீதையும், விளங்குகின்றது என்றால் அது மிகையாகது. எந்த நாட்டில் தமிழ் மணம் கமிழ்கிறதோ அந்த நாட்டில் இந்து சமயமும் மலரும் என்பதில் சந்தேகமே இல்லை உதாரணமாக ஐரோப்பிய கண்டங்களில் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு சிறிய இந்து கோவில் என்றாலும் இருக்கின்றது என்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்ததே.

இப்படியிருக்கையில் சைவசமய மக்களாகிய நாம் எமது சமயத்தில் செய்யப்படுகின்ற ஒவ்வொரு கிரியை விஷயங்களையும் அதன் விளக்கங்களையும் தெரிந்து இருப்பது அவசியமாகும். ஆலயத்தில் கும்பம் வைத்து இறைவனுக்கு அபிஷேகம் செய்கிறார்களே அதன் விளக்கம் என்ன என்பதை தெரிந்திருக்க வேண்டும். உலகமும் அதிலுள்ள ஸ்தாவர ஜங்கம பொருட்களும் சகல ஆத்மாக்களும் ஜலத்தில் (தண்ணீரில்) இருந்தே உண்டாகின்றன. மறுபடியும் பிரளய காலத்தில் ஜலத்திலயே சங்கமமாகி விடுகின்றன- என்று வேதங்கள் கூறுகின்றன ஆகையால் ஆதிகர்த்தாவாகிய இறைவனை ஜலத்தின் மூலம் உருவ வழிபாட்டுக்கு கொண்டு வருவதே பூரண கும்பத்தின் உள் அர்தமாகும்.

இந்த பூர்ண கும்பத்தை மனித உடலாக பாவித்து அதில் இறைவனை தியான, ஜப, பிரார்த்தனை மூலம் யாக சாலைகளிலும் ஆலய மண்டபங்களிலும் வைத்து மந்திரங்களினால் அந்தணர்கள் ஆவாகணம் செய்கின்றார்ள். சக்திவாய்ந்த பீஜாக்ஷரங்கள் கொண்ட மந்திரங்களினால் கும்பஜலம் சுத்திசெய்யப்பட்டு, அதில் தெய்வ ஆவாஹணம் செய்யப்படுகின்றது. இந்த ஜலம் கெடாதிருக்க ஏலம், ஜாதிக்காய், கிராம்பு, பச்சை கற்பூரம், குங்குமப்பூ முதலிய திரவியங்கள் சேர்க்கப்படுகின்றன.

கும்பம் வைக்கும் குடத்தில் சுற்றப்படுகின்ற நூல் நாடி நரம்புகளை குறிக்கின்றது. தேங்காய் முடி, தலைமுடியை கண்களை தேங்காய் கண்ணும், அஷ்ட லக்ஷ்மிகளின் கடாக்ஷம் நிறைந்திருக்க மாவிலை வகைக்கப்படுகின்றது பட்டு வஸ்த்திரத்தை குறிக்கின்றது, சந்தணம், குங்குமம், புஷ்பம், தர்ப்பை கூர்ச்சம் முதலியன கும்ப அலங்காரப் பொருட்களாக அலங்கரிக்கப்படுகிறது.

இப்படியாக அந்தனர்கள் ஆலயங்களிலே பூரண கும்பத்தை வைத்து சக்திவாய்ந்த பீஜாக்ஷரங்கள் கொண்ட மந்திரங்களால் ஜெபித்து தூபம், தீபம், நைவேத்தியம், ஷோடஷ உபசாரம் முதலியன செய்து உயிர்கொடுத்து பூரண கும்பத்தை தெய்வீகம் கலந்த உருவாக மாற்றுகிறார்கள்.

---

## ஹரிகதா காலட். . .

இதில் தஞ்சாலூர் பாணியின் சிறப்பு அம்சம் என்னவெனில் காலட்ச்சபம் செய்பவர் நின்று கொண்டே செயல்படுவார். இங்கு ஜால்ரா, சிப்லா போன்ற பலவிதமான பக்கவாத்தியங்களை உபயோகப்படுத்துவார்கள். ஹரிகதா காலட்சேபத்தில் பலவிதமான முறைகள் அடங்கிய பழங்கால சம்ரதாயங்கள் அடங்கி இருக்கும். காலட்சேபம் நடத்துபவர் பின்பு மிருதங்கம், வயலின் வாசிப்பவர்கள் உட்காருவதற்காக ஒரு பெஞ்சு போட்டிருப்பார்கள். இந்த பெஞ்சுக்கு பின்னால் உபயக்காரர்களும் கூடப் பாடுபவர்களும் நின்றிருப்பார்கள். இங்கு ஒருவர் தம்புராவை கையாள்வார். மற்றொருவர் ஜால்ராவை வாசிப்பார்.

இங்கு பஞ்ச பதிகம் பாடுவார்கள். பஞ்சபதிகம் என்பது 5 கடவுள்களான கணேசர், விஷ்ணு, குரு, சரஸ்வதி, ஆஞ்சநேயர் இவர்களின் புகழைப் பற்றிய பாடலாகும் இப்பாடல்கள் சமஸ்கிருதத்திலும் மராட்டிய மொழிகளிலும் உள்ள பதங்கள், பாடல்களாகும். இவைகள் முறையான இசையைத் தோற்றுவிக்க உதவுபவையாகும் பாகவதர் விரிவுரையின் நடுவில் சிப்வாக்கட்டையை உபயோகப்படுத்துவார் ஹரிகதா காலட்சேபத்தில் தட்டுக்களின் மூலம் தாளத்தைக் குறிப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முக்கியமான காரணம் காலட்சேபம் செய்பவர் விரல்களால் தாளத்தைக் கணக்கிடுவதற்குப் பதிலாக தட்டுக்களை உபயோகப்படுத்துவதாகும். உதாரணமாக ஆதிதாளத்தைக் குறிக்க இடைவெளி விட்டு 7 தட்டுக்கள் தட்டுவதாகும்.

ஹரிகதாவில் உபயோகிக்கும் மொழிகள் சமஸ்கிருதம், மராட்டி, தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாளம் ஆகும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# உலக சைவப் பேரவையின்

## இலங்கைக் கிளை

— பண்டாரவளை அன்புச்செல்வன் —

இலண்டன் மெய்கண்டான் ஆதீன முதல்வரும், உலக சைவப் பேரவையின் அமைப்பாளருமான தவத்திரு சுவாமி சிவநந்தி அடிகளார் உலகமெங்கும் சைத்திருமறை ஒலிக்கவேண்டும் என்ற பேரார்வத்தோடு சைமக்கள் வாழும் நாடுகளிளெல்லாம் உலகசைவப் பேரவையின் கிளைகளை தோற்றுவித்து வருகின்றார்.

உலக சைவப் பேரவையின் பிரதான நோக்கம் சைவசித்தாந்தக் கருத்துக்களை உலகமெங்கும் பரப்புவதும், உலகின் எந்தப்பாகத்திலும் வாழும் சைவ மக்களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதுமாகும்.

தவத்திரு சிவநந்தி அடிகளாரின் அயராத முயற்சியின் பலனாக கடந்த சில மாதங்களுக்கு முன் தமிழகத் தலை நகரான சென்னையில் தெய்வத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது பல சமய அறிஞர்கள், சான்றோர்கள் முன்னிலையில் ''உலக சைவப் பேரவை'' அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது:

அதன் தொடர்ச்சியாக சைவத் தமிழர் வாழும் நபடுகளில் எல்லா இதன் கிளைகளை உருவாக்கி, பல நாடுகளின் குழுவினரையும் ஒன்று காட்டும் பெரும்மணியை அடிகளார் முன்னின்று மேற்கொண்டார்.

**தவத்திரு சிவநந்தி அடிகளாரின் வேண்டுகோளுக்கிணங்க** இலங்கைப் பிராந்திய அமைப்பாளராகவும் செயலாளராகவும் கொழும்பு இந்து கலாசார மன்றத்தின் பொதுச் செயலாளரும், 'இந்து கலாசாரம்' இதழின் ஆசிரியருமான திரு மிகு ஏ. எம். துரைசாமி அவர்கள் இயங்கி வருகின்றார்.

உலக சைவப் பேரவையின் தலைமைப்பீடத்தின் பணிப்பிற் இணங்க இலங்கைக் கிளையை அமைக்கும் பெருமுயற்சியில் அமைப்பாளர் திரு. ஏ. எம். துரைசாமி அவர்கள் முன்னின்று செயற்படுகின்றார்.

இலங்கையின் இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சரையும், யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முதல்வரையும் இணைக்காப்பாளர்களாக லண்டன் தலைமைப்பேரவை நியமித்துள்ளது.

பிரதேச ரீதியாக தமிழ்நாடு (இந்தியா) சிங்கப்பூர், மலேஷியா, பினாங்கு ஆகிய இடங்களிலும் பேரவையின் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன, ஒரு நாட்டில் இயங்கும் குழுவில் பத்துப் பேருக்குமேல் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கைக் கிளையில் அங்கம் வகிப்பதற்கென பதினான்கு அறிஞர்கள் பிரமுர்கள் அடங்கிய குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (பெட்டிச் செய்தி காண்க) இக்குழுவினர் கலந்துகொள்ளும் இலங்கை கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் விரைவில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஏனைய நாடுகளிலும் கிளைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் உலக சைவப் பேரவையின் முதலாவது சர்வதேசக் குழுக் கூட்டம் நடைபெறும் என தவத்திரு சிவநந்தி அடிகளார் அறிவித்துள்ளார். இக்கூட்டத்திற்கு ஒரு கிளையிலிருந்து இரண்டு உறுப்பினர்கள் கலந்துகொள்வர். இக்கூட்டம் சிங்கப்பூர் அல்லது மலேஷியாவில் நடைபெற பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் சிங்கப்பூரில் அமைக்கப்பட்ட கிளையின் தலைவராக சிங்கப்பூர் தேசிய கல்வி நிறுவனத்தின் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி. சுப திண்ணப்பன் அவர்கள் தெரிவாகி உள்ளார். (இவர் அண்மையில் நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவில் கலந்து சிறப்பித்தவர்).

இவ்வாறே மலேஷியா, கோலாலம்பூரில் திரு. வி. சீனிவாசகம் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது,

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## உலக சைவப் பேர.....

(முன்பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கிளையின் குழுவினருக்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, உலக சைவப் பேரவை சைவமக்களிடையே மறுமலர்ச்சிக்கும், புத்துணர்வுக்கும் பெரும்பங்காற்ற வேண்டுமென அவாவுகின்றோம்

### இலங்கைக்குழுவினர்

திரு கே. சண்முகலிங்கம்
பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அமைச்சு, கொழும்பு.

திரு கே. நீலகண்டன்
பொதுச் செயலாளர்,
இந்து மாமன்றம், கொழும்பு.

டாக்டர் குமார் வடிவேல்
உதவி பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அமைச்சு, கொழும்பு.

திரு ஆர். வைத்தமாநிதி
தலைவர்,
இந்து கலாசார மன்றம், கொழும்பு.

திரு ஏ. துரைசாமிபிள்ளை, ஜே.பி.
தலைவர்,
இந்து கலாசார நிலையம், கண்டி.

திரு எம். இராமசாமி
இந்து கலாசார நிலையம், கண்டி.

திரு கே. பாலசுப்ரமணியம்
பொதுச் செயலாளர்,
சைவ முன்னேற்றச் சங்கம், கொழும்பு 2.

திரு எஸ். சரவணமுத்து
இந்து மாமன்றம், கொழும்பு

திரு இராஜ புவனேஸ்வரன், ஜே.பி.
பொதுச் செயலாளர்,
விவேகானந்த சபை, கொழும்பு 13.

திரு இராதாகிருஷ்ணன் J.P.U.M.
தலைவர்,
நுவரேலியா இந்து கலாசார நிலையம்,
தலைவர், கொட்டகலை பிரதேச சபை'
நுவரேலியா.

திரு எம். சிவநேசராசா
தலைவர்,
இந்து இளைஞர் மன்றம், மட்டக்களப்பு.

கலாநிதி எஸ். கே. சிற்றம்பலம்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சரித்திரப்பகுதி
தலைவர், இந்து மாமன்றம், யாழ்ப்பாணம்.

திரு கே. சிவபாதசுந்தரம்
பொதுச் செயலாளர்,
இந்து இளைஞர் மன்ற சம்மேளனம்
திருகோணமலை.

திரு பா. சி. சர்மா
அதிபர்,
இந்துக் கல்லூரி, கொழும்பு.

குறிப்பு:- இந்து மாமன்ற பொதுச் செயலாளர் திரு கே. நீலகண்டன், திரு எஸ். சரவணமுத்து ஆகியோரது ஒப்புதல் கடிதம் இன்னும் கிடைக்கவில்லை. கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.

## சிறுகாரியம் - சிறந்தகாரியம்

— இரா. வைத்திமாநிதி —

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக தினமும் கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ வினாயகர் ஆலயத்திற்குச் சென்று வணங்கி வருகின்றேன். இது மனதிற்கு மிகவும் சாந்தமாக இருக்கின்றது. மேலும் நித்திய கருமங்களை செய்வதற்கு வினை தீர்க்கும் வினாயகர் எல்லாவகையிலும் துணை நின்று அருள் பாலிக்கின்றார்.

கொழும்பில் எல்லாக் கோவில்களிலும் பொதுவாக அறிவிப்புப் பலகை என்று ஒன்று உண்டு அதில் பூஜை அபிஷேகம் விஷேட தினங்கள் பற்றிய விபரங்கள் யாவும் எழுதப்பட்டு இருப்பது வழக்கம். இது கோவிலுக்கு வருபவர்களுக்கு விபரங்கள் அறிந்து கொள்வதற்கு மிகவும் வசதியாக இருக்கின்றது.

எம்பெருமான் ஸ்ரீவரதராஜ விநாயக ஆலய அறங்காவலர்கள் இந்த அறிவிப்பு பலகையில் ''நற்சிந்தனை'' என்று தனியாக குறிப்பிட்டு பல நல்ல பெரியோர்களின் அரும்பெரும் உபதேசங்களை பொன்வாக்குகளை, கோட்பாடுகளை தேர்ந்து எடுத்து அதில் ஒன்றை தினமும் எழுதி அதன் கீழ் வழமையான மற்றைய விபரங்களை எழுதி வருகின்றார்கள்.

இது மிகவும் நல்ல ஒரு எடுத்துக்காட்டான சிறந்த செயல். இதை வரவேற்கின்றோம். கோவிலுக்குப் போவது, சுவாமி கும்பிடுவது மட்டும் போதாது. எமது பெரியோர்கள் கூறியிருக்கும் அரும் பெரும் உபதேசங்களை தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பு அளிக்கின்றது. தினமும் இந்தக் கோவிலில் எழுதி இருக்கும் ஒவ்வொரு உபதேசங்களைப் படித்து நமது சிந்தனைக்கு எடுக்கும் பொழுது நம்மை நாமே திருத்திக்கொள்வதற்கு ஊக்கமும் உறுதியும் கொடுக்கின்றது.

மனிதனை மனிதனாக வாழவைக்க மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட பல நல்ல காரியங்களில் இதுவும் ஒன்று என்று சொல்லலாம். இதனை சகல ஆலயங்களிலும் பின்பற்றினால் மிகவும் நன்மையாக இருக்கும்.

சிறு காரியம் என்றாலும் சிறந்த காரியம்!

(சென்ற இதழின் தொடர்ச்சி)

# மலையக இந்து நிறுவனங்களும் கல்வித்துறையும்

— கோ. சேனாதிராஜா LL-B —

இரண்டாவது காரணியான நிதிப்பற்றாக்குறையினை நோக்குகின்றபோது, சமய வகுப்புகளில் கல்வி புகட்டும் ஆசிரியர்களுக்கு ஒரு சிறு தொகையினை வழங்கவேண்டியுள்ளது. அன்றியும் தேனீர் போன்ற இதர செலவுகளும் ஏற்படுகின்றது. தூர இடங்களில் இருந்து வரும் ஆசிரியர்களுக்கு சிலவேளை பிரயாணச் செலவும் வழங்கப்படுகின்றது. காலத்துக்குக் காலம் ஏற்படும் இதர செலவுகளும் நிதிப்பற்றாக் குறையினை ஏற்படுத்துகின்றது. இந்து நிறுவனங்களினால் காலத்துக்குக்காலம் கொண்டு நடாத்தப்படும் சமய திருவிழாக்களுக்கு ஆடம்பரமான முறையில் செலவு செய்யப்படுவதில் ஒரு சிறு பகுதியை சேமித்தல், கோவில் வருமானத்தில் (ஏனைய அங்கத்தினர், பொதுமக்களின் சம்மதத்துடன்) சிறு தொகையினை ஒதுக்கிக்கொள்ளுதல், அங்கத்தினர்களின் சந்தாபணத்தினை ஒழுங்குமுறைப்படி பேணுதல், கூடியளவு அத்தியாவசியமன்றி செய்யப்படும் செலவினை குறைத்தல் என்பவற்றினால் நிதிப்பற்றாக்குறையினை ஓரளவிற்காயினும் தீர்த்துக் கொள்ள முடியும்.

மூன்றாவது காரணியான ''ஆசிரியர்கள் பற்றாக் குறை'' பொதுவாக மலையக பாடசாலைகள் முழுவதுமே தற்போது எதிர்நோக்கி வருகின்றதோர் பொது அம்சமாகும். இருப்பினும் குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள பாடசாலை அதிபர்களின் உதவியுடனோ அல்லது ஆசிரியர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்து உரையாடி சிறந்த ஆசிரியர்களை தெரிவுசெய்துக்கொள்வதுடன் சமய பாட வகுப்புக்கள் அல்லது அறநெறிப்பாடசாலைகள் இலவசமாக நடாத்தப்படுவதனையும் அறநெறி முறையில் அமைந்தது என்பதையும் அவர்களுக்கு தெரிவித்தல் வேண்டும். மேலும் ஒரு சிறு தொகையினை வேதனமாக வழங்குதலும் ஆசிரியர் பற்றாக்குறையினை ஓரளவிற்காவது தீர்த்துக்கொள்வதற்கு இயலும். இனி, தொடர்ச்சியாக குறிப்பிட்ட ஆசிரியர்களை சமய வகுப்புகளுக்கு கல்விபுகட்ட அனுமதியாது சில வகுப்புகளுக்கு விடுமுறை வழங்குவதனால் ஆசிரியர் வரவில் ஒழுங்கினை பேணுவதற்கும் வாய்ப்பளிக்கும்.

மலையகத்தில் உயர்கல்வியைப் பொறுத்தளவில் ஏனைய சமூகங்களின் உயர்கல்வி வளர்ச்சிப்போக்குடன் போட்டிபோட முடியாது பெரிதும் பின்தங்கியுள்ள நிலைமையில் உள்ளது. மலையகத்தில் உயர்தர வகுப்பில் கல்வி பயில்வோர் ஆரம்ப பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்கள் ஆயிரம் பேருக்கு ஒருவர் மாத்திரமேயாகும். மேலும் பட்டதாரிகளாக பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறுவோர் 0.5%மேயாகும்.

அண்மைக்கால புள்ளி விபரங்களின் அடிப்படையில் மலையக பாடசாலைகளில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்படும் மாணவர்களில் கணிசமான தொகையினர் நிதிப்பற்றாக்குறையினால் (பொருளாதாரக் குறைவினால்) பல்கலைக்கழக பிரவேசத்தில் நுழைவதில்லை. ஆகவே இத்தகைய மாணவர்களை (பொருளாதார குறைவினால்) இனம் கண்டு அவர்களின் உயர் கல்விக்கு சிறு தொகை பணத்தை குறிப்பிட்ட காலங்களுக்கு ஒருமுறை வழங்குவதற்கு கோவில் நிருவாக சபையினரும், இந்து நிறுவனங்களும் முன்வரல் முக்கிய கடப்பாடாகும். ஏராளமான கோவில்களில் காணப்படும் வங்கி கணக்குகளை நோக்குகின்றபோது பல இலட்சங்கள் வீனே பிரயோசனப்படுத்தாது முடங்கிக்கிடப்பதை காணமுடியும்.

இவ்வாறான ஓர் திட்டத்துக்கு முன்னோடியாக மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் இரண்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில் அளித்துவருகின்றது. குருநாகல் சிவசுப்பிரமணிய கோவில் மேலும் இரு பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. கொழும்பு தமிழ் இளைஞர் கூட்டமைப்பு இரு பல்கலைக்கழக மாணவிகளுக்கு புலமைபரிசில் வழங்கிவருகின்றது. நாவலப்பிட்டி ஆன்மீக கலை இலக்கிய மன்றம் இரண்டு மாணவர்களுக்கு இத்தகைய புலமைபரிசில்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. ஆகவே இவ்வாறான ஓர் முன்னோடி திட்டம், மலையகம் முழுவதும் விஸ்தரிக்கப்பட வேண்டிய அவசியத்தை மலையக கோவில் நிருவாகங்களும், இந்து நிறுவனங்களும் உணர்வதான காலம் எப்போது வரும்?

மனம் ஆயத்தமானால்
உலகம் ஆயத்தமாகும்

# தூய பக்தனின் மீது மிகுந்த அன்புடையவர் இறைவன்



இளம்பிறை மணிமாறன்

"பக்தனை இரட்சிப்பதற்காக பகவான் எதனையும் செய்யும் இயல்புடையவர். அந்த அளவுக்கு தூய பக்தனின் மீது அன்புடையவர் அவர்" என்று தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்திருந்த திருமதி இளம் பிறை மணிமாறன் கொழும்பு ஜெயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவிலில் அருளுரையாற்றுகையில் கூறினார்.

"கங்கையின் மைந்தன்" என்னும் தலைப்பில் அவர் பீஷ்மரின் வரலாற்றைக் கூறுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அந்த உரையில் இருந்து தொகுக்கப்பட்ட மற்றும் விடயங்கள் வருமாறு:—

பஞ்சபாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையில் குருஷேத்திரத்தில் உக்கிரமான யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது.

இந்த யுத்தத்தில் பீஷ்மனை எவ்விதத்திலும் வெல்ல முடியாது என்று உணர்ந்துகொண்ட பாண்டவ சேனை சிகண்டியைக் கொண்டுவந்து பீஷ்மரின் முன்னால் நிறுத்துகிறது.

இந்தச் சிகண்டி பீஷ்மரைக் கொல்வதற்காகவே சிகண்டினி என்னும் பெயரில் பெண்ணாகப் பிறந்து ஆணாக உருமாறியவள். பெண் தன்மையுள்ளவன் முன்னிலையில் அம்பு தொடுத்தால் தன் ஆண்மைக்கு இழுக்கு ஏற்படும் என்பதால் பீஷ்மர் அம்பு தொடுக்க மாட்டார் என்பதற்காகவே சிகண்டியைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

அர்ச்சுனனுக்குத் தேர்ச் சாரதியாக பணிபுரிந்த பகவான் கிருஷ்ணரே இந்தக் காரியத்தைச் செய்தார்.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பீஷ்மரின் மீது சரமாரியாக அம்பு மழை பொழியும் படி கிருஷ்ணர் கூறுகிறார். பகவானின் கட்டளைக்குப் பணிந்து அர்ச்சுனனும் சரமாரியாக அம்பு மழை பொழிந்தான். அவரின் உடலெங்கும் அம்புகள் தைத்தன. இறுதியில் பீஷ்மர் விழ்ந்தார்.

எனினும், தான் அனுஷ்டித்த சத்தியம், பிரமச்சரியம் ஆகியனவற்றின் வலிமையால், மீண்டும் ஒரு பிறவியெடுக்கும் நிலை ஏற்படாமல் புண்ணிய காலத்தில் அவர் வாழ்ந்து இருக்கின்றார்.

அவ்வேளையில் பகவான் மகா விஷ்ணு அங்கு வருகிறார். "நீ முத்தியடையும் காலம் வந்துவிட்டது

உடனே பீஸ்மர் கூறுகிறார். "பகவானே, நான் முத்தியடையும் காலம் வந்துவிட்டது என்று கூறுகிறீர்கள். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் என் மனதில் சில சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளனவே" என்று கூறுகிறார்.

பகவானும் அந்த சந்தேகங்கள் யாவையென கேட்க பீஷ்மர் கேட்கிறார்.

"எவராவது வாக்குத் தவறலாமா" என்று பகவான் "அது கூடாது" என்று கூறவே பீஷ்மர் மீண்டும் "அது மனிதருக்கு மட்டுந்தானா அந்தச் சட்டம்? தெய்வம் வாக்குத் தவறலாமா? என்று

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## தூய பக்தனின்.....

(முன்பக்கத் தொடர்ச்சி)

கேட்கிறார். பகவான் மீண்டும் ''தெய்வத்துக்கும் அதே சட்டம்தான். மனிதரானாலும் தெய்வமானாலும் வாக்குத் தவறக் கூடாது'' என்று கூறுகிறார்.

உடனே பீஷ்மர் கேட்கிறார்.

''அப்படியானால் தாங்கள் மட்டும் எப்படி மூன்றாம் நாள் யுத்தத்தில் எந்த ஒரு ஆயுதத்தையும் தொட மாட்டேன் என்று செய்த சத்தியத்தை மீறி சக்கராயுதத்தை ஏந்தியபடி என்னைக் கொல்வதற்கு வந்திர்கள்?'' என்று பகவான் கூறிய பதிலை விளக்குவதற்குள், முன்னர் நடந்த சம்பவத்தை இங்கு விவரிப்பது அவசியம்.

பாரத யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர், பாண்டவ சேனையின் சார்பாக அர்ச்சுனனும், கௌரவ சேனையின் சார்பாக துரியோதனனும் பகவான் கிருஷ்ணரிடம் படையுதவி கேட்டுச் செல்கின்றனர்.

இருவருமே உதவி கேட்டு வந்ததால் யாருக்கு படை உதவியைக் கொடுப்பது என்னும் பிரச்சினை எழுகிறது. ஆதலால் பகவான் கிருஷ்ணர் ஒருவருக்குத் தன்னிடமுள்ள படையை வழங்கவும் மற்றவருக்கு தான் போய் உதவி செய்யவும் எண்ணியவராக யாருக்குப் படை வேண்டும், யாருக்குத்தான் வேண்டும் என்று கேட்கிறார்

துரியோதனன் தனக்குப் படை உதவியே வேண்டுமென்றும் அர்ச்சுனன் தனக்கு கிருஷ்ணரே வேண்டுமென்றும் கூறுகிறார்கள்.

அதேவேளையில் துரியோதனன் கிருஷ்ணரிடம், ''தாங்கள் யுத்தத்தின்போது எந்த ஒரு ஆயுதத்தையும் தொடக்கூடாது'' என்று சத்தியமும் வாங்கிக் கொள்கிறான்.

துரியோதனன் இதனைப் போய் பீஷ்மரிடம் கூறியதும் அவர், ''துரியோதனா. மோசம் போய் விட்டாயே! கண்ணனா சொன்ன சொல்லைக் காப்பவன்? அவன் சொன்ன சொல்லை மீறுவான். யுத்தத்திலே ஆயுதத்தைத் தொடுவான். சத்தியத்தை மீறுவான். இது சத்தியம். என் பிரம்மச்சரியத்தின் மீது ஆணை'' என்று கூறுகிறார்.

பாரத யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. மூன்றாம் நாள் யுத்தத்தில் பீஷ்மரின் வில்லிலிருந்து சரமாரியாகப் பாயும் நாண்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் அர்ச்சுனன் சோர்ந்து விழ்கிறான். உடனே அவனுக்கு தேர்ச்சாரதியாகப் பணிபுரிந்த கிருஷ்ணர் கீழே குதிக்கிறார். சக்கராயுதத்தை எடுத்துக்கொண்டு கோபாவேஷத்துடன் பீஷ்மர் முன்னால் போய் நிற்கிறார். அவரின் முகம் கோபக் கனலை கக்குகிறது.

சத்தியவர்த்தனான பகவானே தன் முன்னால் வந்தது கண்டு பீஷ்மர் அதிர்ச்சியடைகிறார். அவரிடம் இருந்த அஸ்திரங்களெல்லாம் கீழே விழுகின்றன.

''நான் என்ன அசுரனா? அசுரன் என்று என்னை நினைத்துவிட்டாரா? நான் என் கடமையைத்தானே செய்தேன். அதற்காக பகவான் என் மீது கோபம் கொள்வதா?'' என்று பீஷ்மர் சிந்திக்கிறார்.

அந்தச் சந்தேகத்தைத்தான் அம்புப் படுக்கையில் இருந்துகொண்டு இப்போது பகவானிடம் பீஷ்மர் கேட்கிறார்.

''தாங்கள் மட்டும் சத்தியத்தை மீறி சக்கராயுதத்துடன் என்னை தாக்க வந்தீர்களே'' என்று. அதற்கு பகவான், ''யுத்தத்தின்போது எந்த ஆயுதத்தையும் நான் தொட மாட்டேன் என்று சத்தியம் செய்திருப்பதாக துரியோதனன் உன்னிடம் வந்து சொன்னபோது நீ என்ன சொன்னாய்? கண்ணனா வாக்கைக் காப்பாற்றுவான். அவன் நிச்சயம் வாக்கு தவறுவான், ஆயுதத்தைத் தொடுவான், இது சத்தியம் என் பிரம்மச்சரியம் மீது ஆணை'' என்று நீ வாக்குத்தத்தம் பண்ணினாயே. அதை மறந்து விட்டாயா? பக்தனின் வாக்கு பழுதாகக் கூடாதே என்பதற்காகத்தான் சக்கராயுதத்தைத் தொட்டு உன் வாக்கைக் காத்தேன்'' என்று பகவான் விளக்கமளிக்கிறார்.

அந்த அளவுக்கு பகவான் பக்தர்கள் மீது அன்பு வைத்துள்ளார். அவரின் அன்புக்கு எதுவும் ஈடாகாது.

நன்றி: வீரகேசரி

---

## உலகத்தோடு ஒட்டி வாழ்

இந்த உலகம் பெரியதொரு பல்கலைக்கழகம். இயற்கையே இதன் தலைசிறந்த ஆசிரியர். இதனோடு ஒட்டி வாழும் பொழுதுதான் இரக்கம், ஈகை, பொறுமை போன்ற பண்புகள் வளரும். குகைவாசம் இந்த சிறப்பைத்தராது. உலகத்தோடு ஒட்டி வாழ்ந்து உலகப்பற்று அறுக்க முயல்வதே சிறந்த சாதனை,

**சுவாமி சிவானந்தர்**

---

# வாசகர் வட்டம்

''பழம்பெரும் புனித நகர் காலி'' என்ற தலைப்பில் சிவநெறிச் செல்வர் திரு தி. செந்தில்வேள் ஜே.பி. அவர்கள் வைகாசித் திங்கள் இந்து கலாசாரம் இதழில் எழுதியிருந்த அரிய கட்டுரையை படித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். சிவநெறிச் செல்வர் திரு செந்தில்வேள் அவர்களின் சமயப் பணி பாராட்டத் தக்கது. இவரைப் போன்று சமயப் பணியில் ஈடுபடுபவர்களை காண்பது அரிதிலும் அரிது. நமது சமயம் புத்துயிர் பெற்று பழைய நிலைக்கு திரும்புவதற்கு திரு செந்தில்வேள் முன்னோடியாகத் திகழ்கிறார். இவருக்கும் இவரின் குடும்பத்தினருக்கும் மீனாட்சி சுந்தரேஸ்வரர் மட்டுமல்ல சைவசமய மக்கள் அனைவரும் நீடூழி வாழ்கவென வாழ்த்துவர் என்பதில் ஐயமில்லை.

வண்ணார்பண்ணை நாவலர் ரோடு காலஞ்சென்ற சைவப் பெரியார் திரு பொன்னையா அவர்களும் அவரது துணைவியார் செல்லத்தங்கமும் கோவில் கிட்டங்கியிலே தங்கி பல வருடங்கள் காலி சிவன் கோவிலை பராமரித்து வந்தனர் (இவர் காலியில் ஒரு காலத்தில் பிரபல வர்த்தகராகவும் திகழ்ந்தவர்). இப்பெரியாரின் சமயப் பணியை காலிநகர் வாழ் சைவமக்கள் நன்கறிவர்.

இப்பெரியாரின் மகன் திரு பி. சுந்தையா காலி நகரசபையின் பிரதம கணக்காளராக இருந்தபோது இவரும் இவரது பாரியார் துளசிதேவியும் கோவில் நிர்வாகம் ஒழுங்காக நடைபெற பேருதவி புரிந்தனர். இவர்களின் மூத்த மகன் திரு பஞ்சலிங்கம் அவர்கள் (இப்பொழுது இங்கிலாந்தில் வசிக்கிறார்) இங்கிலாந்து போகும்வரை, தமது பாட்டனார் செய்த திருப்பணியை செய்து வந்ததை யாவரும் அறிவர். இன்று காலி சிவன் கோவில் அறங்காவலர் சபை தலைவராக சிவநெறிச் செல்வர் திரு தி. செந்தில்வேள் ஜே. பி. முன்வந்திருப்பது மீனாட்சி சுந்தரேஸ்வரர் கடாட்சம் என்றுதான் நினைக்கின்றேன்.

த. விஸ்வலிங்கம்
வண்ணார்பண்ணை

---

கடந்த வைகாசித்திங்கள் இந்து கலாசாரம் முக்கனியிலும் மேலாய் தித்தித்தது. எல்லா கட்டுரைகளும் அம்சமாக இருந்தது. இந்து கலாசாரம் இந்து கலாசாரம் இந்து மக்கள் மத்தியில் ஒரு பௌர்ணமியாய் திகழும் என்பதில் ஐயமில்லை.

செல்வன் க. ரெட்ணையா
குறிஞ்சாமுனை.

# அன்னைக்கு ஓர் இனிய கவிமாலை



திருமதி புவனேஸ்வரி ஸ்ரீசுந்தரகாந்தன்

அன்னை எனும் அமுதத்தை
அள்ளியே வழங்கி நிதம்
இங்கிதமாய் என்றும் நான் வாழவென
உவகை கொண்டாய் இத்தரணி தனில் — நீ
என்மீது அன்பைப் பொழியவென
அவதரித்தாய் தாயே!

ஈர்ஐந்து மாதங்கள் எனைச் சுமந்து
எவ்வித இடர்களும் என்மீது
தவழாதவாறு பலநாட்கள் கண்வளர்க்க
மறந்தே நீ கண்ணை இமை காப்பதுபோல்
என் மனம் நோகாத வண்ணம்
வளர்த்தாய் தாயே!

இதையெண்ணி நித்தம் உனை நான்
போற்றிப் புகழ்ந்திருப்பேன்
தாயின் மடியில் வாழ்ந்த இறந்தகாலங்கள்
என்றும் திரும்புவதில்லை அதை எண்ணி
ஏங்குவதிலோர் பயனுமில்லை இந் நிகழ்வில்
பேருதவி செய்தாய் தாயே!

அதையெண்ணியே என் நிகழ்காலம் விரைகிறது
எண்ணங்களோ எதிர்காலத்தை நோக்கியே
வட்டமிடுகின்றது எனது எதிர்காலம்
செழிப்பாக அமையுமென்பதே எனது மனத்திண்ணம்
அதற்கு அடியெடுத்து வைத்தவள் — நீ
உனக்கு எப்படி நான் நன்றி சொல்வேன் தாயே!

வாழிய நீ என்றும் — தாயே!
உனை நான் நிதம் மறவேன்
காலங்காலமாக நானே உனக்கு
பணிவிடைகள் செய்து மனம் மகிழ்ந்திடுவேன்
இதுவே எனது மனதில் திடீரென குதித்தெழுந்த
அன்னைக்கு ஓர் இனிய கவிமாலை

# அவனியில் பவனி

நா. ஹரிதாஸ்

★ மட்டக்களப்பு மெதடிஸ்த தமிழ் மகாவித்தியாலயத்தில் பயிலும் மாணவர்களுள் 82% இந்துக்களே. இந்துமாணவர்கள் சரஸ்வதி பூசையை கொண்டாடு முகமாக இவ்வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தை ஏற்பாடு செய்து தருமாறு மேற்படி வித்தியாலயத்தின் அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தபோது அதிபர் மண்டபத்தை பயன்படுத்த மறுத்துவிட்டாராம். நல்ல நோக்கத்திற்காக இந்து மாணவர்களுக்கு அம்மண்டபத்தை பயன்படுத்த மறுத்தமை மாணவர்கள் மத்தியில் பெரும் விரக்தியும் வேதனையும் ஏற்பட்டுள்ளதாக அறிகிறோம். இது கண்டிக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய அம்சம்.

★ நடந்துமுடிந்த க.பொ த.(உயர்தரம்) பரீட்சையில் இந்துசமய பாட வினாத்தாள்களை திருத்துவதற்கு பிரதம பரீட்சை அதிகாரியாக பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியரான கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த திரு அருட்செல்வம் அவர்கள் நியமிக்கப்பட்டமை இந்துக்கள் மத்தியில் அதிருப்தியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தி உள்ளது. இந்துக்களில் தகுதி வாய்ந்த கல்விமான்கள் எத்தனையோபேர் இருந்த போதிலும், இவ்வாறு பாரபட்சமான முறையில் நியமிக்கப்பட்டமைக்கான காரணம் யாது என இந்துக்கள் மத்தியில் பரவலாக கேள்வி எழுப்பப்படுகிறது. எதிர்காலத்தில் இவ்வாறான பாரபட்சமான தவறுகள் ஏற்படாது உரிய முறையில் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதியையும், கல்வி அமைச்சையும் கேட்டுக்கொள்கின்றோம்.

★ இலங்கையைச் சேர்ந்த கணேஷ் சிற்றம்பலம் என்ற தமிழ் மாணவன் தனது 13வது வயதில் லண்டன் சர்ரே பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் பட்டம் பெற்று உலக சாதனை ஒன்றை நிலைநாட்டி உள்ளார். இவரின் பெற்றோரும் கணிதத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களே.

★ திருமந்திர மாநாடும் திருமூலர் விழாவும் எதிர் வரும் 9-11-1992ல் வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தில் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான பூர்வாங்க ஆயத்தங்களை உமாஷங்கரானந்தா சரஸ்வதி சுவாமிகள் செய்துவருகின்றார். இவ்விழாவின் போது திருமந்திரம் சிறப்புமலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்படும்

★ படிக்காத மேதை காமராஜரின் அறிவு வாளின் கூர்மை போன்றது அதனால்தான் அந்த படிக்காத மேதையைச் சுற்றி படித்த மேதைகளின் கூட்டம் மொய்த்துக் கிடந்ததாம்.

★ சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவில் தஞ்சைமாவட்டத்தில் பனை ஓலை நோட்டுப் புத்தகத்தில் மாணவர்கள் தமிழில் ஷோர்ட் ஹேண்ட் எழுதினார்களாம். க்ளாடியஸ் என்ற பாதிரியார் தனது டயரியில் 2-9-1806 தேதியிட்டு இதனை மேற்கோள் காட்டி குறிப்பிட்டிருக்கின்றார். பென்சிலால் பேப்பரில் ஷோர்ட்ஹேண்ட் எழுத கஷ்டப்படும் இன்றைய சமுதாயத்திற்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

★ தலைநகரில் அண்மையில் நடந்து முடிந்த தேசிய தமிழ் சாகித்திய விழாவில் பல அறிஞர்களுக்கு பட்டமும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. ஆனால் நீண்ட காலமாக தமிழுக்கும் சமயத்துக்கும் சேவையாற்றிக்கொண்டு வரும் அறிஞர்கள் நமது நாட்டில் இருக்கின்றபோது, இவர்களை ஏன் இந்து கலாசார இராஜாங்க அமைச்சு பட்டமும் விருதும் வழங்கி கௌரவிக்கத் தவறியது என இந்து உலகம் மிகவும் விசனப்படுகின்றது.

★ கொழும்பு இந்து இளைஞர் மன்றம் (YMHA) பேதங்கள் இன்றி பல சமயத்தைச் சார்ந்த சமூக சேவை செய்யும் மூத்த அறிஞர்கள் ஆறு பேருக்கு சர்வதேச முதியோர் தின விழாவின்போது பரிசில்களை வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தது இதனால் பல்வேறுபட்ட சமூகத்தினரும் கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தினரை பாராட்டுகின்றனர்.

★ அண்மையில் தோற்றுவிக்கப்பட்ட கொழும்பு இந்து மகளிர் மன்றம் பல சமூகப் பணிகளுடன் இந்து மகளிர்க்கென ஒரு விடுதி அமைப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

---

நாம் எதையும் இழந்துவிட்டாலும் இழக்காவிட்டாலும் கௌரவத்தை மட்டும் இழக்கக் கூடாது. இழக்க இடம் தரக்கூடாது.

— சாக்கரடீஸ்

---

*With Best Compliments*

*from*

# RAVILUX COMPANY LTD.

**2nd FLOOR, 399 GALLE ROAD,**

**COLOMBO – 4.**

**Phona No. 508058**

**Telex No. 22658 GLAXY**

With Best Compliments

of

# RENUKA INDUSTRIES

IMPORTERS & EXPORTERS

MANUFACTURERS IN ALL KINDS OF

**ALUMINIUM WARES**

170 - 172, OLD MOOR STREET,
COLOMBO - 12.

Telephone : 435579

"இந்து கலாசாரம்"

வளர்ச்சிபெற்று வையகம் சிறப்புற

வாழ்த்துகின்றோம்



# நந்தன் அச்சகம்

8, கொடுகொடல்ல வீதி,

கண்டி.

26,760/-


*Best Compliments*

*of*

RIKEN TIRE

# Jailaxmi Stores

HEAD OFFICE

91-A Maliban Street, Colombo 11
Telephone: 26149, 541329.
Cable : " JAYEXPORT "
Telex 22744 JLS CE.
Fax 587240.

BRANCH

153, Union Place.
Colombo 2.
TEL 548547, 547741



இப்பத்திரிகை கொழும்பு இந்துகலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி, நெல்சன் ஒழுங்கை 39/23ம் இலக்க இல்லத்தில் வசிப்பவரும் இதன் ஆசிரியருமான திரு. ஏ. எம். துரைசாமி, என்பவரால், கொழும்பு-13 149-பி ஜெம்பட்டா வீதி, ஒஸ்கா எண்டர்பிரைஸஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.